1468

No. M. 2210

Editor & Proprietor } வை. மு. கோதைநாயகி அம்மாள்
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

வருஷ சந்தா ரூ. 1-8-0

JEGAN MOHINI

மலர் 7 ஜகன்மோகினி இதழ் 5



தனிப் பிரதி அணா 3.

3L
2/0022

...மோகினி ஆபீஸ்,
...6, தோடித் தெரு,
...வல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்

ஏழாவது ஆண்டு ! ஏழாவது ஆண்டு !!

ஜகன்மோகினி.

இதன் 7-வது ஆண்டு 1929ஸு டிசம்பர்மீ 1 முதல் ஆரம்பம். இதில் **ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால்** எழுதப்பட்ட **"சாருலோசனா"** என்னும் அற்புதமான நாவலின் இரண்டாம்பாகமும், ஹாஸ்ய விநோதங்களும், அனுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவருகின்றன. இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளிநாடு இரண்டிற்கும் தபாற்கூலியுள்பட ரூ. 1-8-0 தான். **"சாருலோசனா"** வின் முதல்பாகம் சென்ற வாண்டின் கடைசி நான்கு சஞ்சிகைகளில் வெளிவந்ததால், புதிதாகச் சேரும் சந்தா நேயர்கள் **எட்டணா** கூடச் சேர்த்து **ரூ. 2** அனுப்பினால், அவற்றை அனுப்புகிறோம்.

சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும். ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகையை **வி. பியில் அனுப்புவதால் சந்தா நேயர்களுக்கு மூன்றணா அதிக செலவுண்டாதலால் முன்பண மனுப்புவதே நலம்.**

(2) இவ்வாண்டில் நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் புதிய நம்பரைக் கொடுப்பதால் இனிமேல் அவர்கள் எழுதும் கடிதங்களில் **புதிய நம்பரை** மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் **கடைசித் தேதியில்** நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 **தேதிக்குள்** கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெரிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு, மூன்றணா ஸ்டாம்பு அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன், தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்து **கொள்ளவேண்டும்.** அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

(5) நமக்கு ஏஜண்டுகள் இல்லாத விடங்களில் ஐந்து **சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்கள் ஒரு வருஷ சஞ்சிகையை இனமாகப் பெறுவதுடன் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

மானேஜர்.

16 MAR 1931

16-வது அதிகாரம்.

காலச்சக்கரம்—வேளையின் கொடுமை.

பாகீரதியினிடத்தில் கடிதத்தைக் கொடுத்து அனுப்பிவிட்ட ஜெயமணிக்கு அப்பொழுது தாங்கவியலாத பெருந் துக்கம் வந்துவிட்டது. "என்னுடைய இந்த ரகஸிய விஷயத்தை கடுமையான நோய் வாய்ப்பட்டுள்ள நம் கணவனிடத்தில் தெரிவிப்பது பிசகு. அதனால் மன அதிர்ச்சியுண்டாகும்" என்கிற பயத்தினால் அவள் பேசாது அடக்கிவிட்டாள். அன்னமும் கொள்ளவில்லை. வயிறும் மனமும் அனலாகப் பற்றி எரிகின்றன. "ஆ! நான் இச்சமயம் படும் துன்பத்தைப் போல இவ்வுலகில் இதுபரியந்தம் யாரேனும் அனுபவித்திருப்பார்களா! இனியேனும் அனுபவிப்பார்களா! இல்லை; இல்லை. இதற்குப் பிறந்த மகா பாவி நான் ஒருத்திதான். ஐயோ! தற்சமயம் நான் எந்த விதமான கவலைக்குத்தான் ஈடு கொடுப்பேன்? எண்ணரிய வினையைச் செய்து பெண்ணாய்ப் பிறந்து, மனம் புண்ணாக நொந்து, கண்ணீர் சிந்திக் கலங்குவதை எண்ணி அழுவேனா! என்னுடைய எல்லாத் துயரங்களையும் மறந்து வெட்கமின்றி மானத்துடன் வெளியுலாவும்படியாகச் செய்தும், சுமங்கலி என்கிற பட்டத்தை யளித்தும் என்னை யாதரிக்கும் கர்த்தாவாகிய என் ப்ராண நாதர் படுத்துவிட்ட விசனத்தை எண்ணி அழுவேனா! குல மருத்துவன் என்கிற ஓர் மதிப்பினால் நம்பிய சோமநாதன் என்மீது காட்டிய கொடுமையை — பாதகத்தை, வஞ்சகத்தை — எண்ணி அழுவேனா! என்னுடைய உயிரையே பாழ் படுத்திய பரம த்வேஷியாகிய பாகீரதி சொல்லிய வசைச் சொல்லிற்கும் அவள் எண்ணத்திற்கும் நொந்தழுவேனா! கடவுள் என்னை இப் பூவுலகில் படைத்துப் பாழ் படுத்திப் பரிதபிக்கச் செய்துவிட்ட சங்கடத்தை எண்ணி அழுவேனா! நான் எதைத்தான் எண்ணி அழுவேன்? ஹா! எனக்கு

21022

ஒன்றுமே தோன்றவில்லையே! இவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்தால் என்னிதயம் வெடித்துவிடும்போல விருக்கின்றதே யன்றி வெடிக்கக் காணவில்லையே! எல்லாவிதத்திலும் கொடுமையான பாதகத்தைச் செய்துவிட்ட எனக்கு இம்மட்டும்—இம் மங்கல்யத்துடன்—இறப்பேனும் கிடைக்கலாகாதா! என்னுடைய பிறவியில் அந்த பாக்யம் கூட கிடைக்காமற் போகாது காப்பாற்றலாகாதா! நான் என்ன செய்வேன்? பாவி சோமநாதன் இன்று வந்துவிடுவானோ! அவன் தீய எண்ணத்தினால் என்ன நேர்ந்துவிடுமோ! என் விதி எத்தகைய ஆபத்தில் என்னைச் சிக்கவைக்குமோ! ஒன்றும் தெரியவில்லையே! என்ன செய்வேன்?" என்று தனக்குள் மிகுந்த கவலையிலாழ்ந்து ஓர் நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம், எதிரிலிருக்கும் மேஜை மீது தன்னிரு முழங்கைகளையூன்றி விரல்களால் முகத்தைப் பொற்றிக்கொண்டு சாய்ந்து கிடந்தாள். அவளுடைய விழியினின்று நீர்ச் சுனையைப் போல கண்ணீர் அந்த மேஜை மீது சொட்டிப் பெருகிக்கொண்டிருக்கின்றது. அவளுக்கு இவ்வுலக ஸ்மரணையே அற்றுவிட்டது. தூர விருந்து பார்ப்போர், 'இவளுக்கு உயிர் இருக்கின்றதா, இல்லையா!' என்று சந்தேகிக்கும்படியாக அசைவற்ற பதுமையைப் போல அமர்ந்துவிட்டாள்.

அத்தருணம் டாக்டர் சோமநாதன் அவ் வீட்டிற்கு வந்தான். நமது ஜெயமணியின் புருஷர் படுத்திருக்கும் அறை அவ் வீட்டின் மத்திய பாகத்திலுள்ளது. ஜெயமணி உட்கார்ந்திருந்த இடம் முதல் அறையாக இருந்ததால் சோமநாதன் அவ் வறையின் வழியாகச் செல்கையில் ஜெயமணி உட்கார்ந்திருந்த கோர காட்சியைக் கண்டுவிட்டான். அப்படியே திகைப் பூண்டை மிதித்தவன் போல நின்றுவிட்டான். அப்போதிருந்த ஜெயமணியின் உருவத்தைக் கண்ட யார் தான் கண்ணீர் விட்டுக் கதறாமலிருப்பர்! ஜெயமணியின் மீதே தன்னுயிரை வைத்து ஏங்கித் தவிக்கும் சோமநாதனுக்கு வருத்தம் பொங்கியது வியப்பா? வியப்பேயல்ல. அவன் தனது இமை கொட்டாத வண்ணம் அவளைப் பார்த்தபடியே நின்றான். "ஆகா! இந்த மின்னாள் இவ்விதம் தன்னையே மறந்து

விசனக்கடலில் ஆழ்ந்து துயரமே வடிவு கொண்டப் பதுமை போல விற்றிருக்கக் காரணம் யாதாக விருக்கும்? தன் பர்த்தாவுக்கு உடம்பு சரியில்லை என்ற துக்கமாக விருக்குமோ! அன்றி நேற்று நாம் சொல்லியதால் ஏற்பட்ட வருத்தமாக விருக்குமோ! அல்லது வேறு இன்னும் புதிதாக துயரம் சம்பவித்திருக்குமோ! ஒன்றும் தெரியவில்லையே! ஆஹா! என்ன அழகு! என்ன தோற்றம்! என்னைப் பித்தனாக அலையச் செய்வதற்கே இவ்வித உருவத்துடன் இம் மாதரசி இவ் வுலகில் தோன்றினளோ! நாம் சமார் 5 நிமிடங்களாக இவ்விடம் நிற்கின்றோம். அதையும் இவள் அறியவில்லையே! உம்; பாவியிலும் கொடும்பாவி என்னைப் போன்றவர்கள் வேறு உண்டா?.......இல்லை; இல்லை. துரதிர்ஷ்ட ஹீனன் நானே! எதற்கும் அருகில் செல்வோம்" என்று எண்ணியவாறு மெல்ல அவளிருக்கும் நாற்காலியின் அருகாண்மையில் சென்று சிறிது நேரம் நின்று கவனித்தான். ஜெயமணியினுடைய கண்ணீர் மேஜைமீதிருந்து அருவி போலப் பாய்ந்தோடுவதைக் கண்டதும் அவன் மனம் படும் பாட்டைக் கூறச் சாத்தியமாகுமா! அவன் மனத்தில் துக்கம் பொங்குகின்றது; அவன் விழியிலும் நீர் பெருகத் தொடங்கியது. சகிக்க வியலாத பரம வேதனையை அடைந்து விட்டான். "ஐயோ! இத்தகைய பரிதாபகரமான நிலைமையிலிருக்கும் ஜெயமணியை நாம் இனியும் அழைக்காது,பேசாதிருப்பது கூடாது." என்று எண்ணி மெல்லிய குரலால் "ஜெயமணீ! ஜெயமணீ! இதென்ன கோரமான காட்சி! ஐயோ! உனக்கென்ன உற்றது? உன்னை மறந்து இவ்விதம் புலம்பிக்கொண்டிருக்கின்றாயே!" என்று நாத்தழைத்தவாறு மெல்லக் கேட்டான்.

அதுபரியந்தம் இவ்வுலகத்தையே மறந்து அபார மனத்துயரத்தினால் கட்டு மீறிக் கலங்கிக்கொண்டிருந்த நமது மங்கையர்க்கரசியாகிய ஜெயமணியின் செவியில் இக் குரல் விழுந்தவுடன் அப்போதே உயிர் பெற்று எழுபவளைப்போல மெல்ல தனது சிரத்தை நிமிர்த்திப் பார்த்தாள். அப்போது அவளுடைய கரங்களில் ஒன்று கன்னத்திலும், மற்றொன்று மோவாயின் அடியிலுமாக அமர்ந்திருந்தன. சிரத்தின் கேசங்கள் சின்ன பின்னமாகக் கலைந்து கிடப்

பதையும், கண்கள் இரண்டும் இரு வாவியை நிகர்த்ததாயும் அவ் வாவியில் மதியின் அழகிய ப்ரகாசம் படுவதால் வாவி சிவந்த நிற மாகத் தோற்றுவது போல, கண்கள் சிவந்து கிடப்பதையும் எவரா லும் வர்ணித்துக் கூற முடியாத விதமாய் முகத்தில் பரிதாபம் நிரம்பி யிருந்ததையும் கண்ட சோமநாதனின் நிலையே முற்றிலும் தடுமாற்ற மடைந்துவிட்டது. நமது மடமயிலாள் சிரசை நிமிர்ந்து பார்த் ததும் தன் னெதிரில் கண்ணீர் மாலையும், கவலை முகமும், சோகத் தோற்றமும் ஒருங்கே கூடிய சோமநாதன் நிற்பதைக் கண்டாள். அவளுடைய அத்தகைய நிலையிலும், காய்ந்த பாத்திரத்தில் தண் ணீரை ஊற்றினால் எவ்விதமாகுமோ அதே போல வெகு சீற்றம் உண்டாய்விட்டது. அவ்வாறு உண்டான மறு நிமிடமே அவள் அவ்வாசனத்தை விட்டு வெகு முறைப்பாக எழுந்து விலகி நின்று சோமநாதனை நோக்கி, "டாக்டர்! நான் நேற்று உம்மிடம் தெரி வித்தது போல இன்று வேறு டாக்டரை வரவழைத்தாய்விட்டது. தாங்கள் இனி ச்ரமப்படவேண்டாம். என்னுடைய பர்த்தாவின் உடம்பு குணமாவது எனக்கு முக்கியமேயன்றி எந்த மருத்துவன் மருந்து கொடுப்பினும் அதனால் எனக்குப் பாதக மில்லை. தாங்கள் செல்லலாம். என்னுடைய துயரத்தைப் பற்றித் தாங்கள் உசாவ வேண்டாம்." என்று சிறிது கோபத்துடன் கண்டிப்பான தொனி யில் கூறினாள்.

இவ் வசனத்தைச் செவியுற்ற சோமநாதன் நிலைமை எவ் வாறிருக்கும்? நிலை புரண்டது; எனினும் தன்னைத் தேற்றிக் கொண்டு பேசத் தொடங்கி "ஜெயமணீ! பாவி என்மீது உனக்குத் தயவில்லையா! என்னைக் கண்டு உன் மனம் இரங்கவில்லையா! நான் உன் பொருட்டாக உருகித் தவிப்பதை நீ கவனிக்கமாட்டாயா! என் மனம் உன்னிடத்தில் எவ்விதம் ஐக்கியமாகி இருக்கின்றதென் பதையும், (Real Love) உண்மைக் காதலுடன் தவிக்கின்றதென் பதையும் நான் என்ன விதமாகக் கூற வியலும்? கையிலுள்ள பொரு ளாயின் உடைத்துக் காட்டலாம். மெய்யினுள் உள்ள என் இதயக் கோயிலில் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் உன்னுருவை நான் எவ்விதம் காட்டுவேன்? என் நிலைமை எங்ஙனம் இயம்புவேன்?

ஜெயமணி! என்னை நீ துஷ்டன், துர்ஜனன், காமுகன் என்று எண்ண லாம். நான் அத்தகையவனல்லன். தேகத்தை பொட்டிய அநாசார மான காமத்தைக் கொண்டு உன்னை நான் இச்சிக்கவில்லை. ஆத்மார்த் தமான அரிய காதலை நான் கொண்டிருப்பதை நினைத்துப் பார். ஜெயமணி! நான் உன்னுடைய உறவினனுயும் குடும்ப வைத்திய னுயும் இருப்பதை நீ திடீரென்று விலக்கி விடலாமா! நான் உன் னுடைய அனுமதி யின்றி, மனச் சம்மத மின்றி ஒருபோதும் தவறுக நடக்கமாட்டேன். இதை நீ உறுதியாக நம்பு. என்னை மருத்துவ முறையிலும் விலக்கி விடாதே. நான் அதைத் தெரி விக்கும்பொருட்டாகவே இவ்விடம் வந்தேன். நான் சுதந்திர மாயும் சந்தோஷமாயும் உன் வீட்டிற்கு வந்துகொண்டிருக்கையில் வேறு மருத்துவன் இவ்விடம் கால் வைப்பதாயின் என் மனம் சம்மதிக்குமா! இன்று வேறு டாக்டர் வந்ததைக் கண்டேன்; என்னுள்ளம் துடித்தது. நான் இங்கு வந்து போகும் பாக்யத்தை யும் இழந்துவிட நேர்ந்துவிட்டதை எண்ணிக் கலங்கினேன். உன் னிடம் நேரில் முறையிடும் பொருட்டாக வந்தேன். ஜெயமணி! ஜெயமணி! என்னை அன்னியன் போலாக்கி விடாதே! என் னுடைய ஆவியைப் பிரிக்காதே'' என்று சோமநாதன் பேசிக் கொண்டிருக்கையில் கங்காதருடைய முக்கியமான சிநேகிதர் அவரைப் பார்க்க வந்தார். அதை யறிந்த ஜெயமணி நடுங்கிப் போய் "ஐயோ! நம்மை இன்னிலைமையில் அந்த மனிதன் கண்டு விட்டால் மிகவும் கேவலமாகிவிடும்'' என்று எண்ணியவளாய் சரேலென்று எழுந்து அவ்விடம் விட்டுப் பதில்பேசாது போய் விட்டாள்.

அவ்வாறு அவள் சென்றதானது சோமநாதனின் உயிரை வாங்குவது போலாய்விட்டது. அடுத்த க்ஷணத்தில் சோமநாதன் கங்காதரர் படுத்திருந்த இடத்திற்கு வந்து வழக்கம் போலப் பார்த் தான். நோயாளியாகிய கங்காதரர் தன் மனைவி தனக்கு சீக்கிரம் குணமடையும் பொருட்டாக இரண்டு மருத்துவர்களைக் கொண்டு பார்ப்பதாக நினைத்துப் பேசாதிருந்தார். சோமநாதன் பார்த்துக் கொண்டே இருக்கையில் அங்கு கங்காதருடைய சிநேகிதர்

வந்தார். அவர் கங்காதரரைப் பற்றிய விஷயங்களை சோமநாத னிடமே விசாரித்துப் பதில் தெரிந்துகொண்டு போய்விட்டார். சோமநாதனும் கங்காதரரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு புறப் பட்டுவிட்டான். ஜெயமணி மீண்டும் அந்தப் பக்கம் வருவாளோ வென்று எதிர்பார்த்து ஏமாற்றமடைந்து போய்விட்டான்.

தினந்தோறும் சோமநாதன் தவறாமல் ஜெயமணியின் வீட் டிற்கு வருவான். ஜெயமணி 'அவன் தானாக நிற்கட்டும். இனி நாம் அவன் எதிரிலேயே செல்லலாகாது' என்ற எண்ணத்துடன் அவன் எதிரிலேயே வராது நின்றுவிட்டாள். இப்படியே 7—8 நாட் களாய்விட்டன. சோமநாதனுக்கு ஜெயமணியைப் பார்ப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. "ஆகா! இதென்ன துரதிருஷ்டம்! நாம் வீடேறிச் சென்றும் அம்மட மங்கையின் தரிசனமும் கிடைக்க வில்லையே! நம்மெதிரிலும் வரக்கூடாதென்கிற எண்ணங்கொண்டு இவ்விதம் நின்றுவிட்டாளோ! இனி நாம் எவ்விதமாக அவளைச் சந்திப்பது?" என்று ஏக்கமடைந்து, மிகுந்த துயரத்துடன் நாற் புறமும் சுற்றிப் பார்ப்பது; ப்ரமை கொண்டவன் போலப் பிதற்று கின்றது. பிறகு வீடு செல்வது. இவ்விதமாகவே சில நாட்கள் கடந்தன. கங்காதரனுக்கு உடம்பு சிறிது குணமாகத் தொடங் கியது. அந்த பெருத்த சந்தோஷத்தினால் ஜெயமணியின் மனத்தில் முன்னிருந்த துயரம் சிறிது நீங்க ஆரம்பித்தது.

"பாரோதியிடம் நான் கடிதம் அனுப்பிய பிறகு அவ்விடத் தில் என்ன நடந்ததோ அக் கடிதத்தைச் சாருகாஸனிடத்தில் கொடுத்தார்களோ, அன்றி என்ன செய்தார்களோ! சாருகாஸ னிடம் கடிதம் சேர்ந்திருக்கும் பக்ஷத்தில் அதைக் கண்டு அவன் என்ன நினைத்தானோ! எவ்வித மன நிலைமையை அடைந்தானோ! ஆகா! அவனுக்கு விவாகமாகி இருக்கும். எந்த புண்ணியவதியோ பெரும் பாக்யத்தை—நிதியை—வாரிக்கொண்டதுபோல சாருகாஸ னின் அன்பிற்குப் பாத்திரமாகி இருப்பாள். ஐயோ! அந்தத் திரு மண வைபவத்தை நான் நேரில் கண்டு களிக்கவும் கொடுத்துவைக் காத பாவியாய் விட்டேனே! திருமணக்கோலம் அவனுக்கு எத்தனை

அற்புதமாக இருந்திருக்கும்! உம். சகல விதத்திலும் தீராத—முடிவில்லாத—பாபத்தைச் செய்துவிட்ட எனக்கு இனி சந்தோஷமா, ஆனந்தமா, மகிழ்ச்சியா! சிச்சி! ஒன்றும் கிடையாது. யாவும் அற்றுவிட்டன. என்னுயிர் மடியவில்லையே யன்றி மற்ற அனைத்தும் இறந்து பட்டொழிந்தன. ஆகா! என்னுடைய ஆயுள் காலத்திற்குள் இன்னும் என்னென்ன வேடிக்கைகள் நடக்குமோ! எத்தகைய துயரங்கள் அணுகுமோ! உம். பிறந்தபொழுதே துயரத்தைப் பகிர்ந்து கொள்வதாக பிரமனிடம் முறியல் சீட்டுப் பெற்றுக் கொண்டுவந்த எனக்கு இனி அது நீங்குவதா! அதைப்பற்றி யோசிப்பதா! ஒன்றுமில்லை, மகா கொடிய பாவியாகிய நான் எவ்வாறு இருப்பினும் என் அன்பான சாருகாஸனாவது இனியேனும் சுகமாக வாழ்ந்து வருவதைக் கேட்டால் அதுவே எனக்குப் போதும். என்னுடைய பிறவியில் இனிமேல் எனக்குள்ள சுகமாவது, எனது பர்த்தாவின் சுகமான வாழ்க்கையும், சாருகாஸனின் சந்தோஷகரமான ஜீவியமுமே யாகும்.” என்று பலவாறாக யோசித்துக்கொண்டே உட்கார்ந்திருந்த ஜெயமணியின் கரத்தில் அன்றைய தபாலில் வந்த கவர் ஒன்று அமர்ந்தது.

அங்ஙனம் அமர்ந்ததை நோக்கிய ஜெயமணி பெரு வியப்படைந்து கடிதத்தை உற்றுக் கவனிக்கையில் அதன்மேல் விலாசத்தின் எழுத்துக்கள் தனது சாருகாஸனுடையவை என்பதை நன்கறிந்துகொண்டதும் நிரம்பவும் ஆவலுடன் கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானாள். அது பின்வருமாறு.

கங்காதாரின் கடுந் தவத்தினாலும்—புண்ணிய வசத்தினாலும்—இப்பூவுலகந் தனில் பொற்கொடியோ, பூங்கொத்தோ என்று ஐயுறும்படிக்கு ஜனித்துலாவும் சௌபாக்யவதி ஜெயமணிக்கு—அன்பார் அமுதச் சுடர் மணிக்கு—மகா பாபிகளிலும் கொடும்பாவியாகிய—அதிர்ஷ்டஹீனனாகிய—சாருகாஸன் ஆசீர்வாதம் செய்து வரையும் லிகிதமாவது.

அன்பார்ந்த ஜெயமணி! நமது ஆயுள் பரியந்தம் அழுது மடியும்படியாகச் செய்துவிட்ட மகா கொடிய சத்துருக்களே

உன்னை மீண்டும் துன்பப் படுத்தியதை எண்ண என்னுயிரே நீங்கிவிடும்போல இருக்கிறது. என்னுடைய பிறவியின் பொருட்டு உனக்குப் பலவிதத்திலும், பலகாலும் துன்பமே சம்பவிக்கின்றது. பாவி பாகீரதி உன்னை மிரட்டிக் கடிதம் வாங்கிவிட்டாளே பன்றி அதன்படிக்கு விவாகம் செய்து கொண்டு அவர்களிஷ்டம்போல ஆடுவதற்குத் தயாராக விருப்பவன் இந்த சாருகாஸன! ஜெயமணியிடத்தில் ஐக்கியமாகி மடிய விருக்கும் சாருகாஸன வேறு மங்கையை மணப்பான்? இந்த சாருகாஸன இனிமேல் அற்ப சந்தோஷத்தைக் கோரி விவாகம் செய்துகொள்பவன்! உம். இம்மையில் அவ்வித சொப்பனமும் காணவேண்டாம். இந்த உட் கருத்தை அறியாத பேய்கள் செய்துள்ள சதியை நினைக்கின் என்னுடல் பற்றி எரிகின்றது.

பொற்பு நிறைந்த புகழ்கொடி நங்காய்!

அந்த மனிதர்கள் உன்பால் செய்த கொடுமையை மறக்கும்படிக்கும், அவர்களை மன்னிக்கும்படிக்கும் நான் எவ்விதம் உன்னைக் கேட்பேன்? கேட்கவும் வெட்கமாக இருக்கின்றதே! என்னுடைய மனமும் ஆன்மாவும் சகலமான விஷயங்களையும் நன்கறிந்துள்ளன. அதைக் கடவுளும் அறிவார். உன்னைக் கண்டு அபாண்டமான வார்த்தை சொல்லிய அந்த கழுதையை கடவுளே பார்த்துக்கொள்வார். என் தாயாருக்கு தேக அசுகமென்று எனக்குத் தந்தி யடித்து என்னை அநாவசியமாக வரவழைத்து என்னை அறியாது ஒரு பெண்ணை நிச்சயம் செய்துவிட்டு விவாகத்திற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து விட்டார்கள்.

நான் தந்தியை உண்மை என்று நம்பி வந்தபின் சகல செய்திகளையும் அறிந்தேன். உன் கடிதத்தைக் கண்டேன். அப்போது எனக்குற்ற சீற்றத்திற்கோர் எல்லையே இல்லை. நான் எனது துயரத்தையும், கோபத்தையும் உள்ளடக்கிக்கொண்டு அந்த வஞ்சகர்களோடு பேசாமல் நேராக பெண் வீட்டிற்குச்

சென்றேன். அந்தப் பெண்ணையும், அவள் பிதாவையுங் கண்டு சகலமான விவரங்களையும் உடைத்துக் கூறிவிட்டேன். பின்னும் நான் வீட்டிற்குப் போகாமல் நேரே லாகூருக்குப் போய்விட்டேன். அவ்வாறு போகும்போது அவர்களுக் கோர் கடிதம் எழுதிப் போட்டுவிட்டுச் சென்றேன்.

என்னுருயிர் ஜெயமணி! எங்களால் உனக்குற்ற இம்மனத் தாங்கலை என் பொருட்டாக நீ மன்னிக்கவேண்டும். உன்னு டைய துயரமெல்லாம் போதாதென்று இத்தகைய அநாகரிக மான முறையில் உன்னைப் பேசியதை நினைக்க என் மனம் புண்ணாகின்றது. அந்தோ! உன்னையா பரிசுத்தமற்ற பாவை என்று உலகம் கூறும்! நெருப்பை எரும்பு சுற்றிக்கொண்டது என்பது போலல்லவா இவ்வார்த்தைகள் இருக்கின்றன! இவைகளை எல்லாம் கேட்ட நானா நம்பிவிடுவேன். கடவுளுக் குத்தான் மனம் பொறுக்குமா! ஊரார் கூறுவதாக உன்மேல் வீணான அபாண்டத்தை அந்தப் பாகிரதிப் பேயே சுமத்தி யதை நான் அறிவேன். என் கண்மணி! நீ இவ்வித ஆபாச மான மொழிகளைக் காதினால் கேட்பதும் வேண்டாம். அவைகளைக் கூறியவர்களுக்கே அவ் வார்த்தைகள் பலன ளிக்கும். அம்மொழிகளைச் செவியுற்றவுடன் உன் மனம் எவ் விதம் தத்தளித்திருக்கு மென்பதை நான் நன்கறிவேன். பாவி என்னைக் காதலுற்றதன் பயனாக உனக்கு இப்பரிசுகள் கிடைத்தனபோலும்.

என் செல்வமே! நான் உன்னை அடையாற்றுப் பங்களாவில் கண்டு வருடக்கணக்கிலாய் விட்டன. இத்தனை வருடங் களாக உன்னைப் பார்க்காமல் என்னுள்ளம் படும் வேதனை யை—சங்கடத்தை, துயரத்தை — ஏட்டில் வரைந்துக் காட்டுவதற்குச் சாத்யமாகுமா! பாவியாகிய என் கண்மாவை நான் எண்ணி இரவு பகல் வேதனைக்கு இலக்காகி நொந்து உயிர் துடிக்கும் சமயம் இப்பாதகர்கள் என்னையும் அலக் கழித்து உன்னையும் புண்படச் செய்த பரிபவத்திற்கு என்ன செய்வேன். ஒவ்வொரு விநாடியும் என்னுயிர்

நீங்காதா என்று நான் பகவானைத் தோத்திரம் செய்துகொண்டு என் வாழ்நாளைக் கடத்துவதை அக் கடவுளே அறிவார். என் இன்பமணி! எனது விழியின் பார்வையில் சதா சர்வகாலமும் உனது எழில் நிறைந்த பிம்பம் என் முன் தோன்றி என்னை இன்ப துன்பத்திற்குள்ளாக்குகின்றது. அவ்வாறு உண்டாகும் தோற்றத்தினால் நான் சிறிது சந்தோஷமடைவதையே என்னுடைய பேரின்பமாக எண்ணி மகிழ்கின்றேன். என் பிறவியில் எனக்கு இனி அந்த ஒரு ஆனந்தத்தைவிட வேறு கிடையாது என்பது முடிவாகிவிட்டதால் அதைக்கொண்டே நான் த்ருப்தி யடைந்துவிட்டேன்.

கண்மணி! உன்னுடைய பர்த்தாவுக்கு உடம்பு ஒன்றுமில்லாமலிருக்கின்றதா! அவருக்கு எனது சாஷ்டாங்க நமஸ்காரத்தைத் தெரிவி. உன்னுடைய உடம்பை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளவும். உன்னைப் பற்றி நான் அதிகமாக எதுவும் சொல்லவேண்டியதில்லை. என்னுடைய நிலைமையே அதற்குச் சான்றாகும். நான் உன்னை வேண்டுவதெல்லாம் என்னவெனில் இப்போது நடந்துவிட்ட இந்த அநாகரிக சம்பவத்தை மனத்தில் எண்ணாமல் மறந்து மன்னித்துவிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்வதேயாகும். என்மீது தயவு செய்து அவ்வொன்றை நிறைவேற்றினால் போதும். என்னுடைய இப்போதைய மன நிலைமையில்—தத்தளிப்பில், தடுமாற்றத்தில், மனக் கொதிப்பில்—என்ன எழுதுவது, எவ்விதம் உன்னைச் சாந்தமுறச் செய்வது என்றதை அறிய மாட்டாமல் குழம்பிப்போய்விட்டேன். ஏதோ பித்தன் போல தோன்றியதை வரைந்து விடுத்துள்ளேன். இவைகளில் ஏதேனும் குற்றம் குறை இருப்பினும் அவைகளை மனத்தில் எண்ணாமல், ‘பரதேசி எழுதியது; மகா பாபி எழுதியது; உன்னை எண்ணி ஏங்கி உயிர் நீக்கப் போகும் கொடிய துரதிருஷ்டஹீனன் எழுதியது; பிறந்த நாள் முதல் இறக்கும் நாள் வரையில் சந்தோஷம் இன்னதென்று அறியாது சதா சங்கடத்தையே அனுபவிக்கவேண்டி முன் வந்த சண்டாளன் எழுதியது;’

என்று எண்ணி என் மீது இரக்கங்கொண்டு அச் சம்பவங்களை அடியோடு மறந்துவிட்டதாக உன் கைப்பட ஒரு கடிதம் கண்டால் அதுவே எனக்குப் போதும். அதுவே எனது மகிழ்ச்சியைப் பெருக்கும். அதையே நான் எதிர்பார்க்கின்றேன்.

ஜெயமணி! என்னை மன்னிப்பாயா! என்னை க்ஷமிப்பாயா? "சாருகாஸா! நீ பயப்படாதே! நான் ஒன்றையும் மனத்தில் வைக்கவில்லை" என்ற வாக்கியத்தை உனது அழகே உருக்கொண்ட அற்புதக் கரத்தினல்—அருமைக் கரத்தினல், கங்காதரர் ஆவலுடன் பற்றி முத்தமிடும் கரத்தினல்— ஒரு வரி எழுதி என்னைக் களிப்பிப்பாயா! அவ் விஷயத்திலேனும் என்னுவல் அடங்க மகிழ்ச்சி அடையும்படியான அருளைக் கடவுள் என்பால் பாலிப்பாரா! என்று ஏங்கித் தவித்து எதிர்பார்க்கிறேன். உங்களிருவருக்கும் சர்வ மங்களமும் உண்டாவதாக.

இங்ஙனம், ஊழ்வினையால்
நோந்துழலும் பாபி
சாருகாஸன்.

அந்த கடிதத்தைப் படித்தது தான் தாமதம் அவள் அடைந்த ஆச்சரியத்திற்கும், அபாரமான துக்கத்திற்கும், கரை புரண்ட காதல் வெள்ளத்திற்கும், கூற வியலாத சங்கடத்திற்கும் ஏர் எல்லை இன்றி அவை கட்டு மீறிப் பொங்கி வந்துவிட்டன. புயல் காற்றின் மத்தியில் அகப்பட்ட இரும்பு போல அம்மின்னிடை மாதரசியாள் அகப்பட்டுச் சகிக்க வியலாத நிலைமையில் சிரம்பவும் தத்தளிக்கலானுள். சாருகாஸனுக்கு விவாகமாய் அவன் சந்தோஷமாக இருக்கக் கூடும் என்று அவள் நினைத்திருந்ததற்கு நேர்மாருக இத்தகைய கடிதம் கிடைத்ததும் அளவற்ற ஆச்சரியமும், அவனுடைய பரிதாபகரமான நிலைமைக்கு துக்கமும், மாருத—அழியாத, உறுதியான—காதலுக்குச் சந்தோஷமும், அவன் செய்துவிட்ட காரியத்திற்குப் பெரும் வியப்பும், திகைப்புமாக ஒருங்கே அடைந்துவிட்டாள்.

OF THE REGISTRAR
16 MAR 1931

அவளுடைய விழியின் மழையைத் தடுப்பதற்குக் கடவுளே முன் வராது பதுங்கியிருக்கையில் மானிடரால் ஆகுமா! ஒரு போது மில்லே. கண்ணீர் ஆறு போல ஓடலாயிற்று. அப்போது அவளுடைய மனத்தில் எங்கு மில்லாத எண்ணங்கள் தம் தம் அலங்காரங்களுடன் கிளம்பி தாண்டவம் புரியலாயின. ஒருவித மான தீர்மானத்திற்கும் மனம் இடங் கொடுக்காமல் குழம்பி தத்தளித்து உருகுகின்றது. "ஹா! என்னப்பனே! சாருகாஸா! என் விதியை எண்ணி நான் தான் ஆயுள் பரியந்தம் தொலேக்க வேண்டும். அங்ஙன மிருக்க ஆண் சிங்கமாகிய நீயாவது சுகப் படலாகாதா! ஒரு விவாக மென்பது ஆய்விட்டால் உன் கவலேயில் சிறிது நீங்காதா! உன் வயிற்றில் பிறக்கும் குழந்தைகளேக் கண் டாவது நீ சந்தோஷ மடையலாகாதா! என்ன காரியம் செய்து விட்டாயப்பா! என் மனம் தபிக்கின்றதே! தாங்கவியலாத பரம சங்கடங்கள் என்னேச் சூழ்ந்து வதைத்துத் தாக்குகின்றனவே! உம் தாம் தாம் செய்த வினையைத் தாமே யனுபவித்தல்லவா தொலேக்கவேண்டும். உன் விதி இம்மட்டும் தான் நின்றுவிட் டதோ, என்னவோ! அடாடா! நினேத்தால் பகீர் என்கிறதே! பாழும் மனத்தில் எண்ணிய எண்ணங்களும், கொண்ட ஆநந்தங்களும் கானல் நீராக ஆய்விட்டனவே! அந்தோ! இவ் விதியை எங்கள் தலேயில் எழுதி தவிக்கச் செய்து வேடிக்கை பார்க்க அந்தக் கடவுளே ஆசைப் பட்டுச் செய்கையில் மனிதர்கள் செய்து மனத் தவிக்க விடுவது ஒரு வியப்பா?" என்று தனக்குள் பலவிதமாக எண்ணி வருத்தப்பட்டாள். உடனே அதற்கோர் பதிலே எழுதி ஞள். அப்போதே உரையிலிட்டு அதை தபாலில் அனுப்பி விட்டு இவைகளே வெளியில் தெரிவிக்காமல் தன்னுள்ளடக்கிய வாறு தன் அலுவல்களேக் கவனிக்கலானுள்.

ஜெயமணியின் மனத் அயரத்திஞல் கண்கள் சிவந்து முகம் வாட்டமடைந்துப் போய் காண்போர் மனம் கரையும் வண்ணமாக விருந்த பரிதாபக் காஷியைக் கண்ட கங்காதாரும் ஜெயமணியின் தாயாரும் விஷயம் இன்னதென்பதை அறியக் கூடாமல் கலங்கி விட்டார்கள். அது விவரமாக அவளே ஒருவரும் கேட்கவும் துணியவில்லே; அதனுல் வாளாவிருந்துவிட்டார்கள்.

சோமநாதன் மட்டும் வழக்கம்போல வருவதை நிறுத்த வில்லை. ஜெயமணியோ முன்போல அவனெதிரிலும் வராமல் உள்ளேயே இருந்துவிட்டதால் சோமநாதனின் மனத்தில் வருத்தம் மிகுந்தது. எந்த சமயத்தில் அந்தமடமயிலாளின் திருவுருவைக் காணலாம்; கண்டு களிக்கலாம்; களித்து ஆநந்த நிர்த்தனம் செய்ய லாம்; செய்து மனச் சந்துட்டி பெறலாம், என்கிற கட்டு மீறிய ஆவலினால் தூண்டப்பட்டுத் தவிக்கின்றான். என்ன செய்வதென் பதை யறியாது தத்தளிக்கின்றான். சோமநாதனுக்கு மிகவும் வேண்டியவனும் அந்தரங்கத் தோழனும் உள்ள ஏழுமலை என்பவனிடத்தில் மட்டும் அப்போதைக் கப்போது தன் துயரத் தைக் கூறி ஓலமிடுவான். "ஆ, ஏழுமலை! நான் என்ன பாபம் செய்து புவியில் பிறந்தேன்! என் மனத்தில் இத்தகைய எண்ணம் ஏன் உதித்ததோ தெரியவில்லையே! என்னைச் சதா அவஸ்தைப் படும்படியாகக் கடவுள் செய்துவிட்டாரே! என் இரு நேத்திரங் களிலும் சதா வீற்றிருந்து என்னை வருத்தும் அந்த ஜெயமணியின் மனம் என்ன கல்லா, பெரும் பாறையா! ஐயோ! அந்த தருணீமணி யினுடைய தரிசனத்திற்கும் நான் அபாத்திரவானாகி விட்டேனே! கண்ணால் கண்டு களிப்பதற்கும் மண் விழுந்தது போல அப் பெண் தேவதை என் கண் காணாது மறைந்துவிட்டதே! ஆகா! அந்த மட மயிலாளின் நடையழகை எண்ணுவதா! மின்னல் கொடி போன்ற உருவத்தழகை நினைப்பதா! ஐயுறும்படியான இடை யழகை வர்ணிப்பதா! குணத்தின் கொடையழகைப் புகழ்வதா! மனத்தின் திடத்தழகை உரைப்பதா! அவளுடைய ஜடையழகை—பிச்சடை யழகை—நோக்குவதா! அழகிய உடை யழகைக் காண்பதா! எந்த எழிலை எண்ணிப் பார்த்தால் அவளுக்கிணை மற்ற மங்கையைத் தேட முடியும்? அவளுடைய கருங்கூந்தலால் போடப்பட்ட பிச் சடையுடன் கூடிய பின்னழகைக் கண்டாலும் பிறவித் துயர் நீங்குமே! ஐயோ! நான் என்ன செய்வேன்? ஏழுமலை! இனி எனக் குப் பயித்தியம் பிடித்துவிடும் போல விருக்கின்றதே! அந்த சுந்த ராங்கியை ஒருமுறை என் கண்ணால் பார்த்தாலன்றி என் சித்தம் அமைதியை அடையாதே! நான் அவ்வாரணங்கைக் காணாது எவ் விதம் என் வாணாளைக் கடத்துவேன்? ஹா! அவள் இவ்வாறு

ஒய்யாரமாக உல்லாசமாக நிற்பாளல்லவா! மந்தகாஸமாக நகைத்துப் பேசுவாளல்லவா! ஐயோ! இந்த எழிலமுதை என்று பருகக் கிடைக்கும். நண்பா! ஏழுமலே! இதற்கென்ன செய்வது ஒன்றும் தோன்றவில்லேயே! நான் அந்தப் பச்சைக் கிளியைக் காணவேண்டுமென்ற இச்சைகொண்டு அச்சமின்றி அவள் வீடேறிச் சென்றும் அவ் வஞ்சகத்தைக் காணுமல் நெஞ்சம் பதறி சஞ்சலத்துடன் திரும்பி வரும்படியாக ஆய்விட்டதே! அவள் சினேகிதைகளுடன் எப்போதேனும் செல்கையில் காட்சி கொடுப்பாள். அந்த பாக்யமும் தற்போது கிடைக்கவில்லேயே! ஏழுமலே! என்னுடைய சங்கடம் ஒருவருக்கும் தெரியவில்லேயா! என் விஷயத்தில் கடவுள் முதல் யாவரும் ஊமையாகிவிட்டார்களா; ஹா! அதோ! அவளுடைய மோட்டாரில் அவள் செல்கிருள்; ஹாரன் கேட்கிறது. அதோ பார்த்தனேயா! மின்னல் தோன்றி மறைவது போல மறைந்து விட்டது. நான் வரும் தீங்கைப் பின்னர் அனுபவிக்கின்றேன். அந்த இளங் கொடியாளேக் கண்ட நேரத்தில் அப்படியே சிறு குழந்தையைப்போல வாரி எடுத்து என் மோட்டாரில் வைத்துக் கொண்டுபோய் விடட்டுமோ! இதனுல் எனக்குண்டாகும் சாதக பாதகத்தைப் பிறகு அனுபவித்துக்கொள்கிறேன்; அலாக்காகத் தூக்கிக்கொண்டு வந்து விடட்டுமோ!'' என்று இப்படி எல்லாம் வாய்ப் பிதற்றுவான். இன்னது சொல்கிருேம் என்பதையே மறந்து சதா ஜெயமணியின் பேச்சையே பேசிக்கொண்டிருப்பான்.

இவைகளே எல்லாம் கேட்டுக்கொண்டிருக்கும் ஏழுமலே என்பவனின் மனம் குழப்பத்தை யடைந்துவிடும். சோமநாதன் படும் துன்பத்தைக் கண்டு சகிக்கக் கூடாது வருத்தம் ஏற்படும். "இத்தகைய அன்பும் காதலும் நாவல் புத்தகங்களில் படித்திருக்கின்ருேமே யன்றி உண்மையில் கண் முன்பாகக் காண்பது வியப்பிலும் வியப்பன்ருே!'' என்று தனக்குள் தான் ஆச்சரிய மடைவான். "இத்தகைய வேதனேயினுல் எங்கே தற்கொலே புரிந்து கொள்வானே?'' என்கிற திகில் ஒரு புறம் பாதிக்கின்றது. பலவிதமான இம்சையுடன் அந்தந்த சமயத்திற் கேற்றவாறு சோமநாதனுக்குப்;பதிலும், தேறுதலும் கூறிக்கொண்டே வருகிருன். சோம

நாதனுக்கு ஜெயமணியினிடம் ஏற்பட்டுள்ள பயித்தியத்தை எந்த வழியில் மாற்றக்கூடும் என்கிற யோசனையும் ஏழுமலையின் மனத்தில் உதிப்பதுண்டு. இவ்விதமாக இருக்கையில் சோமநாதனுக்குத் திடீரென்று ஒரு கடிதம் வந்தது. அக் கடிதத்தை அவன் வெகு ஆவலுடன் படிக்கத் தொடங்கினன்.

"என் அன்பான நண்பன் சோமநாதனுக்கு சாருகாஸன் எழுதியது. உனது க்ஷேமலாபங்களை அடிக்கடி எழுதவும். நான் திடீரென்று உனக்குக் கடிதம் எழுதியிருப்பதைக் காண நீ ஆச்சரிய மடையலாம். இக் கலியுகத்தில் ஒரு மனிதனுக்குத் தனது சொந்த மனிதர்களை விட—பெற்றோர், உற்றோர்களைவிட—சினேகிதர்கள் தான் பதின் படங்கு அதிகரித்த ப்ரீதியாயும், நம்பிக்கையாயும், த்ரோக சிந்தை யின்றியும், மனப்பூர்வமான நேசத்துடனும் இருக்கிறார்கள் என்பது எனது அனுபவத்தில் சில முக்கிய சாதனங்களினால் கண்டறிந்துகொண்டேன். அவ்வாறு கண்டறிந்ததனால் தான் உனக்கு இக் கடிதம் எழுத முன் வந்தேன்.

நண்பா! நீயும் நானும் நிரம்பவும் சிறிய பிராயம் முதல் ஒன்றாகப் பழகி, ஒன்றாகப் படித்து, ஒன்றாக விளையாடி, ஒன்றாக நேசித்து வந்தோம் என்பதை நீ யறியாதவனன்று. அத்தகைய உயிர் நண்பனாக நாம் இருந்தும் என்னுடைய முக்கியமான — அந்தரங்கமான, சொந்தமான — விஷயங்களில் சிலவற்றை உன்னிடம் இது பரியந்தம் கூறுதொளித்தேன். அவ்வாறு கூறுமலிருந்தது க்ரூரமான எண்ணத்தினலன்று. என் மன வெறுப்பினாலும், ஓர்வித அச்சத்தினாலும், என்னுடைய தாங்கமாட்டாத துக்கத்தினாலும், ஊரையே விட்டுச் சென்றுவிட்டதினாலும் சொல்லத் தவறியதே யன்றி வேறில்லை. இப்போது ஓர் முக்கிய காரணம் பற்றி உனக்குத் தெரிவிக்க முன் வந்தேன்.

நம்மிருவருடைய உறவினளான ஜெயமணி என்னும் குணமணியை நீ அறிந்தவனே யாகும். அம்மடமானை நான்

மணக்க எண்ணியிருந்ததையும் அது நடவாதொழிந்ததையும் உலகமே அறியும். இதை ஊழ்வினை என்பர் சிலர் மனிதராகச் செய்த கொடுமை என்பர் பின்னும் சிலர்; எது எவ்விதமேனும் தொலையட்டும்; நான் ஜென்மாந்திரத்தில் செய்த பாபமே என் கண்மணியை அடையவில்லை என்று எண்ணத் துணிந்தேன். எனினும் என் மனத்துள் அவள் பால் முளைத்த காதல் விதையானது என்னுடைய இருதயத்தில் வேரூன்றி ஆலவிருக்ஷம் போல ப்ரம்மாண்டமாகப் படர்ந்து விட்டது. அந்த காதலை என்னுடல் எரியும்போது தான் கூட எரியிட வேண்டும் காதலின் மகிமையை—அதன் பெருமையை—ஓதிடல் சாத்யமாகாது. அதை அனுபவிப்போருக்கே அதன் அனுபவங்கள் தெரியும். நண்பா! அந்த மாதரசியை—கற்பிற் கரசியை— மறப்பதென்பது கனவிலும் இல்லை.

இப்போது சமீபத்தில் (பாகீரதி வந்த விவரத்தை எழுதி) இவ்விதமான வஞ்சகங்களும் மோசமும் நடந்து விட்டன. இது விவரமாக நான் என் ஜெயமணிக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அவள் மனம் மிகவும் நொந்து புண்ணுகி இருக்கின்றது. அவளுடைய நிலைமையில் அவளுக்கு எத்தகைய மாறுதல்கள் தோன்றுமோ! எவ்விதம் துணிபு உண்டாகிவிடுமோ! தன்மீது அபாண்டமான பழி மூண்டதற்காக உயிரையே விட்டுவிடுவாளோ! எந்த சமயம் தற்கொலை புரிந்துகொள்வாளோ! எந்த விதமான நிலைமையில் இருக்கிருளோ! என்கிற ஓர் பயத்தினுல் என் மனம் தாங்காமல் அவைகளை அறியும்பொருட்டு இதை உனக்கு எழுதுகிறேன். நீ என்னருமை ஜெயமணியின் வீட்டினருகிலேயே இருப்பதையு மறிந்தேன். ஆதலால் இதைத் துணிந்து எழுதுகிறேன். தற்போது என் ஜெயமணி எவ்விதமான நிலைமையில் இருக்கிருள்? இவ்வாறு நடந்த சம்பவத்தினுல் மனம் புண்பட்டு வருந்துகின்றுளா! தேகம் மெலிந்துவிட்டனளா! எங்கள்மீது எத்தகைய மனோபாவத்துடன் இருக்கிருள்?

கங்காதரர் எவ்வித மிருக்கிறார்?' என்கிற விஷயங்களை எல்லாம் என் பொருட்டாக தயவு செய்து விசாரித்தறிந்து எழுதவும். இவ் வுபகாரத்தை நான் உன்னிடம் எதிர்பார்க்கின்றேன். எனக்கு இந்த விஷயங்களைப் பற்றியே கவலை அதிகரித்து இரவு பகலாக வாட்டுகின்றது. ஜெயமணியின் உண்மையான நிலைமையை அவள் அப்படியே எழுதுவது நிச்சயமில்லை. மேலும் அவளுடைய தாயார் அவள் வீட்டிலேயே இருப்பதாக அறிந்தேன். ஆகையால் நான் இனி அவளுக்குக் கடிதம் எழுதுவதும் அவள் தலைக்கு ஆபத்தேயாகும். அவ்வாறான கொடுமைகள் என்னால் ஒன்றும் விளையக் கூடாதென்பதே என்னுடைய நோக்கம். எவ்விதமேனும் என் ஜெயமணி உயிருடன் சௌக்யமாக விருந்தால் அதுதான் என் வாழ்நாளின் இன்பமாகும். அப்போதைக்கப்போது அவளுடைய தேக நிலைமையைக் கவனித்துக்கொள். நீயும் மருத்துவனாகையால் இச் சொல்லை உன்னிடம் உபயோகித்தேன். என்னுடைய இந்த அந்தரங்க விஷயத்தை பிறரிடம்—ஜெயமணியைத் தவிர—வெளியிடாதே! என்னுடைய கண்மணியின் க்ஷேமங்களைப்பற்றி அடிக்கடி எழுது. நான் எழுதும் செய்தியையும் அவளிடம் தெரிவி. சகல விதத்திலும் துர்ப்பாக்யத்தைச் செய்துவிட்ட எனக்கு இந்த சிறு விஷயத்திலாவது மனத்திருப்தியுண்டாகும்படியாகக் கடவுள் கிருபை செய்யவேண்டுமாய்க் கோருகின்றேன். சாருகாஸனுக்கு ஏதோ பயித்தியம் பிடித்துவிட்டது; அதனால் இவ்வாறு எழுதி விட்டானென்று ஏளனமாக எண்ணாதே! எனது மனமார்ந்த நம்பிக்கையினால் உனக்கு எழுதுகிறேன். எனக்குப் பயித்தியமில்லை; என்றாலும் கடவுள் என் வரையில் என்னைப் பயித்தியமாகவே செய்து விட்டார். இன்னும் வெளியார் பார்ப்பதற்கும் பயித்தியமாக என்னறிவையே நானிழந்து தெருவில் மானஹீனமின்றித் திண்டாடும் படியாகச் செய்துவிடாமல் அவ்வொன்றிலாவது கடவுள் காப்பாற்றவேண்டுமாய் அவரை வேண்டுகிறேன். நண்பா! சோமநாதா! நான் உன்னுடைய பதிலை வெகு ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன். நான் நிரம்பவும்

கேட்டதாக ஜெயமணியிடம் கூறவும். சமயம் நேர்ந்தால் இக் கடிதத்தையும் அவளிடம் காண்பிக்கவும்.

இப்படிக்கு
உன்னை நம்பிய நண்பன்
சாருகாஸன்

என்ற கடிதத்தைப் படித்ததும் சோமநாதனுடைய வயிற்றில் திக்கென்றது. அவனுக்குண்டாகிய ஆச்சரியம் கரை புரண்டு போய் விட்டது. ஆகா! அந்த ஜெயமணியின் காதலன் சாருகாஸனா! என்ன ஆச்சரியம் இது! இது பரியந்தம் நமக்கிந்த மர்மம் தெரியாமல் இருந்ததே! ஜெயமணியின் மனம் சாருகாஸனிடத்தில் ஐக்கியமாகி இருக்கிறதென்பதை இக் கடிதமல்லவா காட்டுகின்றது. அவ்வாறு அவளுடைய காதல் வேறு இடத்தில் இருப்பதனால் தான் நம்முடைய நிலைமை அவளுக்குத் தெரியவில்லை. ஐயோ! இச் செய்தி முன்னரே நமக்குத் தெரிந்திருக்குமாயின் நாம் வீணாக இத்தகைய அவஸ்தைக்கு இலக்காகாமலிருக்கலாகுமே! இனிமேல் என்ன செய்யலாம்? அவனோ என் உயிர்த் தோழன்! அவனுடைய உண்மை நேசன் என்கிற நம்பிக்கையில் அவன் தனது அந்தரங்கமான விஷயங்களைத் தெரிவித்து நம்முடைய உதவியையும் எதிர்பார்க்கையில் அவனுக்கு நாம் த்ரோகம் செய்யலாகுமா? நம்முடைய நிலைமையைப் போலல்லவா அவனுக்கும் இருக்கும். ஐயோ! அவன் ஆயிரம் மைலுக்கு அப்பால் என்ன தத்தளிக்கின்றானோ! சீச்சீ! என்ன அநியாய உலகம்! என்ன பாப உலகம்! என்னுடைய எண்ணம் ஏற்கெனவே நிறைவேறாதென்று இருந்த தருணத்தில் இவ்விதமான கடிதமும் வந்துவிட்டதே! இனி நான் என்ன செய்வேன்?'' என்று தனக்குள் பலவிதமான யோசனையினால் உந்தப்பட்டு மனங் குழம்பிப் போய் தன்னை மறந்து உட்கார்ந்து விட்டான். இனி எவ்விதமான வழி செய்து அவளைக் காணலாம் என்று சிறிது யோசித்தான். தான் அவளுடைய வீட்டிற்குச் சென்று தான் வரவேண்டுமென்று தீர்மானித்துத் தன் மோட்டாரில் ஏறி நேராக ஜெயமணியின் வீட்டிற்குச் சென்றான்.

அப்போது மாலை சுமார் 5 மணி இருக்கலாம். நமது பொற் கொடியாள் வழக்கம் போல கங்காதரரின் அருகில் அமர்ந்து அவர் பாதங்களைப் பிடித்து விட்ட வண்ணம் துயரமே வடிவாயிருந்தாள். அச்சமயம் அவள் சிறிதும் எதிர்பாராத விதமாய் சோமநாதன் அங்கு வந்ததைக் கண்டதும் திடுக்கிட்டு எழுந்து, விலகி நின்றாள். சோமநாதன் கங்காதரரை விசாரிப்பது போல விசாரித்துவிட்டு ஜெயமணியை உற்றுக் கவனித்தான். அவள் இவன் முகத்தைப் பாராமல் தலை குனிந்தவாறு கதவினருகில் நின்றாள். சோமநாதன் கங்காதரரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு அவ் வறையை விட்டு வெளியில் செல்கையில் ஜெயமணியை நோக்கி நிரம்பவும் மெல்லிய குரலால் பேசத் தொடங்கி "அம்மா! ஜெயமணீ! உன்னோடு நான் மிகவும் முக்கியமான விஷயமாகப் பேசவேண்டும். அதற்கு இப் போதே தனித்த இடத்திற்கு வந்தாலும் சரி. அன்றி நீ என் வீட்டிற்கு வந்தாலும் சரி. நீ வித்யாசமாக எண்ணவேண்டாம். இதோ இக் கடிதத்தின் எழுத்தைப் பார்" என்று சாருகாஸன் எழுதிய கவரின் எழுத்தைக் காட்டினான்.

இதைக் கண்ட ஜெயமணி அவ் வெழுத்து இன்னாருடைய தென்பதை நொடியிலறிந்துகொண்டு வியப்புற்று நின்றாள். சாரு காஸனிட மிருந்து இவனுக்குக் கடிதம் வரவேண்டிய ப்ரமேய மென்ன என்ற கேள்வியை அவள் மனம் கேட்கத் தொடங்கியது. இந்த கடிதத்திலுள்ள விஷயங்களைத் தானறியும் பொருட்டு அவ னுடன் பேசித் தீருவோம் என்று எண்ணி தன்னுடைய முன் பக்கத்து அறைக்குச் சென்றாள். சோமநாதனும் அவளுடன் கூடச் சென்று கண்ணிமை கொட்டாது பார்த்தவண்ணம் நின்றான். ஜெயமணி சற்று உரத்த தொனியுடன் பேசத் தொடங்கி, "டாக்டர்! என்ன விஷயமாக என்னிடம் பேசவேண்டுமோ அதைத் தெரிவியும். எனக்கு வேலை இருக்கின்றது" என்று முடுக்காகக் கூறினாள்.

சோமநாதன்:—ஜெயமணீ! உன்னிடம் நான் எவ்விதம் பேசுவ தென்ற வெட்கம் என்னைப் பாதிக்கின்றது. இன்று பரியந்தம்

நான் உனது அந்தரங்க விஷயத்தை யறியாது உன்னிடம் பெருத்த தவறுதல் செய்துவிட்டேன். உனது மனத்தை எனது நண்பன் கொள்ளைகொண்டிருக்கிறுன் என்ற விபரத்தை—மர்மத்தை—நான் இன்றே தெரிந்துகொண்டேன். ஜெயமணி! என்னை யறியாது செய்துவிட்ட தப்பிதத்திற்கு என்னை நீ மன்னிக்கவேண்டும். உன்னிடம் நான் மன்னிப்புப் பெறுவதற்கே இங்கு வந்தேன். உன்னுடைய காதலின் அந்தரங்கத்தை அறியாது நான் பாழாகி விட்டேன். என் மனம் முற்றிலும் உன்னையே சுற்றிக்கொண்டு என்னை ஏக்கத்திற்கு ஆளாக்கிவிட்டது. என்னுடைய ஆப்த நண்பன் இச்சித்த பண்டம் நீ என்பதை அறியாது மோசம் போய் விட்டேன். மித்ர த்ரோகம் செய்யவேண்டுமென்ற எண்ணம் ஒருபோதும் நான் கொண்டவனன்று, இனிமேல் நான் உனது உறவினன் போலவும், சகோதரன் போலவும் இருப்பதற்கு நீ அனு மதிக்கவேண்டும். இதோ இக் கடிதத்தைப் படித்துப் பார்.'' என்று கூறிக்கொண்டே சாருகாஸனிட மிருந்து வந்த கடிதத்தைக் கொடுத்தான்.

இங்கு வந்தது முதல் ஜெயமணிக்கு இவன் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் தாங்க வியலாத வியப்பாயும் நம்பத்தகாததாயும் இருக்கின்றது. "அன்று இவன் வெறி பிடித்து அலைந்தவாறு பேசிய தென்ன! இன்று நிரம்பவும் சாத்விகமாகக் கூறியதென்ன! இவை எல்லாம் உண்மையாக விருக்குமா!'' என்று தனக்குள் நினைத்தவாறு சாருகாஸனின் கடிதத்தைப் படித்தாள். அவ்வாறு படித்ததும் அவளுக்குண்டாகிய ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை. ஆகா! இந்த சோமநாதனின் உயிர்த் தோழனு என் அன்பான சாருகாஸன்! என்ன ஆச்சரியம்! இதுவரையில் எனக்குத் தெரியாமல் இருந் ததே! நாம் எந்த விதமான நிலைமையில் இருக்கிறோம் என்ற விஷயத்தை நேரில் அறியும் பொருட்டாக இவ்விதம் எழுதி யிருக்கிறுன். ஹா! சாருகாஸா! உன் மன உறுதி தான் என்னே! உனது காதலின் மகிமை தான் என்னே! உன்னுடைய அன்பின் திறந்தானென்னே! நினைத்தாலும் நிலையிடங் கொள்ளவில்லையே! மகா பாபியாகிய என் பொருட்டாக உன்னை நீ முற்றிலும் பாழாக்

கிக்கொண்டாயே! இதென்ன பரிபவம்! இக் கஷ்டங்களை எவ்விதம் தான் சகிப்பது? சாருகாஸா! உன்னுடைய கடிதத்தைக் கண்டதும் தனது தப்பிதத்தை ஒத்துக்கொண்டு வருத்தமுறும் சோமநாதனை நான் உண்மையில் நம்புவதா, கூடாதா தெரியவில்லையே! என்ன புதுமை! தனது சிநேகிதனுக்காகத் தன் எண்ணத்தையும் மாற்றிக்கொண்டு தான் செய்தது தவறுதல் என்பதை உணர்ந்து மன்னிப்பு வாங்குவது எத்தகைய ஆச்சரியமாக விருக்கின்றது." என்று தனக்குள் யோசித்துக்கொண்டிருக்கையில் சோமநாதன் கண்களில் நீர் ததும்பியவாறு பேசத் தொடங்கி "ஜெயமணி! என்ன யோசனை செய்கின்றுயம்மா! உன்னுடைய உள்ளத்தின் போக்கை யறியாது நான் இது பரியந்தம் ஏமாற்ற மடைந்து மோசம் போய் விட்டேன். உன்னுடைய காதல் தெய்வம் வேறென்றிருக்கின் றதை யறியாது நான் என் மனப்பூர்ணமான காதலை உன்மீது செலுத்தி இரவு பகலாக அதே ஏக்கத்தினல் மனந்தவித்து உருகி விட்டேன்.

எனது அந்தரங்க நண்பன் எழுதியிருப்பதுபோல உன்னை எனது சோதரியாக இனி எண்ணி, உனது க்ஷேமலாபங்களை அப் போதைக்கப்போது எழுதுகிறேன். இன்னும் விஷயங்கள் ஏதே னும் இருப்பின் நீ பயப்படாமல் தாராளமாகத் தெரிவித்தால் அவை களையும் எழுதுகிறேன். இனிமேல் நீ என்னை வித்யாசமாக எண் ணுதே; உனது குடும்ப வைத்தியமுறையிலிருந்து நீக்காதே! உனது உடன்பிறந்த நேசன்போல பாவித்துக்கொண்டு என்னுடைய குற் றங்களை மறந்துவிடவேண்டும். உன் பொருட்டாக என் நண்பன் கதி இவ்விதமாய்விட்டதை நான் இன்றே அறிவேன். அவனே அத்தகைய கஷ்டங்களை ஸகித்துக்கொண்டு உயிர் வாழ்கையில் நான் இனி வித்யாசமாக எண்ணுவது அவனுக்கு த்ரோகம் செய் ததுபோலவாகும். அவ்விதமான சண்டாளன் நானன்று. உன் மர்மமறியாது நான் மோசம்போய்விட்டது உண்மையே யாயினும் இனி என்னை நான் தேற்றிக்கொள்ளும் வழியைத் தேடுவேன். நீ பயப்படவேண்டாம். இவ்விஷயங்களை நீ தயவுசெய்து வெளி யிடாதே! என்னையும் என் மானத்தையும் காப்பாற்றவேண்டுமாய்க்

கோருகிறேன். என் ஜெயமணி! என்மீது இனி நீ ஒரு சிறிதும் தவருன எண்ணம் எண்ணுதே! அந்தவிஷயத்தில் உனக்கு நான் எத்தகைய உறுதியளிக்கக் கூடுமோ அதை அளிக்கத் தயாராக இருக்கிறேன். இன்னும் ஏன் மவுனமாக நிற்கின்ருய்?" என்று மிகவும் உருக்கமாயும் தாழ்மையான குரலினுலும் கேட்டான்.

இது கேட்ட ஜெயமணிக்கு சோமநாதனின் அப்போதைய நிலைமையைக் கண்டதும், அவன் கூறுவது அநேகமாய் உண்மையானதாகவே இருக்கலாம் என்கிற ஓர் சிறு நம்பிக்கை உதிக்கத் தொடங்கியது. தன்னுடைய அந்தரங்க ரகஸியத்தை இவன் நன்கறிந்துகொண்டதனுல் இவனிடம் இனிமேல் தாராளமாய்ப் பேசுவதற்கு யோசிக்கவேண்டாம் என்று எண்ணியவளாய் சோமநாதனைக்கண்டு பேசத்தொடங்கி "டாக்டர்! ஒவ்வொரு மானிடரும் பிறக்கும்பொழுது தலையில் எழுத்துமூலம் வாங்கிக்கொண்டுவந்த வினை என்னும் முறியல் சீட்டுப் பிரகாரம் யாவும் நடக்கின்றன. அவைகளை அனுபவித்துத்தான் தீரவேண்டும். அவ்வாறே அனுபவித்துக்கொண்டே ஜனங்கள் இவ்வுலகத்தில் பிறந்த பாழ்ப்பிறவியைத் தொலைக்கின்ருர்கள். அவ்வகையில் நானும் ஓர் பாபாத்மாவாகப் பிறந்து என் வாணுளையும் கடத்துகின்றேன். அன்று நீங்கள் கூறிய வார்த்தைகள் என்னுடைய மிகவும் புண்பட்டுள்ள மனத்தை கூரிய ஈட்டிபோலத் தாக்கின. இன்று கூறும் இம்மொழிகளானவை அந்த ரணத்திற்கு அவுஷதம் கொடுப்பதுபோலவிருக்கின்றன. இவ்வசனம் என்றும் மாருத மணித்திரளாக இருக்குமாயின் என் போன்ற பாக்யசாலிகள் யாருமில்லை எனலாம். எனது சோதரன்போல உம்மை நான் எண்ணி எனது வருத்தத்தை மறந்து உம்மிடம் பேசுகின்றேன். எனக்கு இனி தேக அசுகமும் உண்டா! அன்றி சாருகாலனுக்குத்தான் செய்தி யாதேனும் உண்டா! இரண்டும் இல்லை. என் பர்த்தாவுக்கு உடம்பு குணமாகிவிட்ட செய்தியை அப்போதைக்கப்போது தெரிவிக்கலாம். அதுவன்றியில் எனக்கு வேறு விசேஷ செய்தி எதுவுமில்லை. அவனுடைய க்ஷேமலாபங்களை என் பர்த்தாவிடம் தெரிவித்தால் போதும். உம்முடைய அந்த அநாகரிகமான விஷயங்களை நான் வெளிப்படுத்துவதில்லை.

இதை நீர் உறுதியாக நம்பி, உமது வார்த்தையைக் காப்பாற்றிக் கொள்ளும். நான் சென்று வருகிறேன்; எனக்குக் கடிதம் வந்ததற்கு நான் பதில் எழுதிவிட்டேன். ஆகையால் இதைப்பற்றி விஷயம் எதுவும் கிடையாது". என்று விசனத்துடன் கண்களில் நீர் ததும்பக் கூறினாள்.

சோமநாதன்—ஜெயமணீ! முக்கிய செய்தி ஒன்று பாக்கியுள்ளது. அதாவது.—உனது விவாக காலத்திற்கு முன்னர் உன்னையே நான் மணக்க விருந்த ஆவல்கொண்டேன். ஏதோ காலக்கொடுமையால் அது நின்றுவிட்டது. உன்னுடைய பாலிய வயது முதல் உன்னிடம் நான் பழகியதுபோல என் நண்பன் சாருகாஸன் பழகவில்லை என்பதை நான் அறிவேன். உனது சிறிய பிராயத்திலேயே உன்மீது எனக்குதித்த காதல் செடியானது நாளடைவில் பெருத்த விருக்ஷமாகி அடையாற்று ஆலமரம்போலத் தழைத்து கூடாரம்போலாய்விட்டது. இந்த ரகஸியத்தை நான் வெளியிடாமலேயே என்னுல் கூடியவரையில் என் மனத்துள் அடக்கிக்கொண்டே வந்தேன். உனது சிறு பிராயத்தில் உன்னை நான் தூக்கிக் கட்டியணைத்து மடிமீது வைத்துக்கொண்டு மகிழ்ந்த நாட்களின் நினைவுகள் இன்னும் எனது இதயத்தில் அப்படியே பசுமரத்தாணிபோல பதிந்துவிட்டன. அந்தக் கால நிகழ்ச்சிகள் என் மனத்தோற்றத்தில் அப்படியே மாறாது கண்முன் காக்ஷி கொடுக்கின்றன. ஐயோ! அக்காலத்தில் நீ சிறிய பாலகியாக இருந்தாய். அதேபோல எப்போதுமிருக்கலாகாதா! என்று நான் நினைத்து வருந்துவதுமுண்டு. என்னிடத்தில் நீ அனுபவத்தில் பழகிய பழக்கங்கள் அதிகமாகவிருப்பினும் சாருகாஸனையே உனது காதல் தாவி நின்ற மர்மத்தை யானறியாதுபோய்விட்டேன். ஜெயமணி! நான் இவ்வாறு சொல்வதை வித்யாசமாக எண்ணாதே! நான் என் மனத்திலிருப்பவற்றை சகஜமாகக் கூறுகின்றேன். என் மனத்தில் படர்ந்துவிட்ட காதலை இனி மாற்றவோ, அகற்றவோ, த்ருப்திசெய்யவோ, இனி ஒருபோதுமாகாது என்பதை நன்கறிந்துகொண்டேன். என்னுடைய மரணத்துடன் என் காதலும் மடிந்துவிடும் என்பதை மட்டும் உனக்கு உறுதியாகக் கூறிவிடுகிறேன். எனக்கு என்னுடைய காதல் நிறை

வேறுமையால் நான் உனக்கு ஒருவிதமான தீங்கிழைப்பேன் என்று கனவிலும் கருதாதே! எனக்குப்போட்டியாக எனது நண்பன் வந்து விட்டான் என்று நான் பொறுமை கொண்டு யாருக்கு எந்தவித மான கெடுதலைச் செய்துவிடுவேனோ என்ற எண்ணம்—சந்தேகம்— இம்மியளவும் கொள்ளவேண்டாம். நான் இதை உறுதியாகக் கூறு வதை நம்பு. என் மனத்தில் இனி உன்னை மறப்பதென்பதும் உன்னைப் பார்க்காமலிருப்பதென்பதும் ஒரு நிமிடமும் ஆகாது. இத னால் என்னை மீறி நான் ஒரு விகல்பமும் செய்யமாட்டேன். உன் வீட்டு வாயிலிலாவது நின்று உன்னைக் கண்டு களித்துப் பேரானந்த மனுபவிப்பதை நீ வித்யாசமாக எண்ணாதே! அந்த விஷயத்தில் என்னைக் கோபிக்காதே! உனது அனுமதியின்பேரில் உன் வீட்டிற் குப் பிரமேயம் ஏற்படும்போது வருவதைத்தவிர இதர சமயத்தில் நான் கால் எடுத்து வைக்கமாட்டேன். இது முக்காலும் உண்மை. ஜெயமணி! காதலின் மகிமையை நீ அறியாதவளன்று. சாருகால னிடத்தில் நீ கொண்டுள்ள மாசற்ற காதலின் தன்மையை எண் ணிப் பார்த்தால் அதனுடைய சங்கடமும் அனுபவமும் உனக்கு நன்கு விளங்கும். நான் ஏதோ காரியார்த்தமாகக் கூறுவதுபோல நினைக்காதே! இவ்விதம் கூறி மோச எண்ணங்கொண்டு த்ரோகம் செய்துவிடுவேன் என்கிற பயம் கொள்ளாதே! உள்ளதை உள்ள வாறு உடைத்துக் கூறிவிட்டேன். என்னுடைய மனம் என்னவோ நிர்மலமானது. உனக்கதைப்பற்றிச் சந்தேகம் வேண்டாம். நான் எனது மனச்சாந்தியின் பொருட்டு நீ வீதியில் செல்கையில், வருகை யில் கண்ணால் கண்டு நான் களிப்பதை வித்யாசமாக எண்ணாமல் இருக்கும்படியாக உன்னைக் கேட்டுக்கொள்கிறேன். அதுதான் எனது கடைசி கோரிக்கை. நீ எந்த சமயம் எந்த விஷயமாக என் னுடைய உதவியை நாடியபோதிலும் நான் அதைச் செய்ய தயாரா கக் காத்துக்கொண்டிருக்கின்றேன். என்னுடைய இவ்விஷயத் தைச் சாருகாலனிடத்தில் கூறாதே! அதை பன்முறை கேட்டுக் கொள்கிறேன். ஜெயமணி! நான் கூறுவதெல்லாம் உன் மனத்திற் குப் பிடிக்கவில்லையா! வெறுப்பாகவிருக்கின்றனவா! ஒரு வார்த் தைக்கும் பதில் பேசாது மவுனமாக விருக்கின்றாயே.

ஜேயமணி—டாக்டர்! மகா கொடிய பாபத்தைச் செய்துவிட்டுப் பிறந்த என்னால் இவ்வுலகில் யாருக்கேனும் கிஞ்சித்து சுகம் கிடைக்காமல் பலகாலும் துன்பமே அனுபவிக்கும்படியாக ஓர் வரன் வாங்கிக்கொண்டு வந்துவிட்டேன். என் பிறவியின் கேட்டிற்கு நான் பதில் பேசவும் வாய் இருக்கின்றதா! என்னுடைய பாழாய்ப் போன ஜென்மத்தின் மூலம் என் அன்பான சாருகாஸன் படும் துன்பம் போதாமல் நீங்களும் அவ்வகையில் வருத்தப்படுவது பூர்வ ஜென்ம வினைதான். உபயோகமற்ற காரியத்தை இனி மனத்தில் எண்ணி மனந்தவிப்பதைவிட அடியோடு மறந்துவிட்டால் மிகவும் நன்றாகவிருக்கும். அவ்வொன்றைத்தான் நான் கூறலாம். மற்றபடி யாது பதில் கொடுப்பேன்? என்னையே நம்பிய சாருகாஸனுக்கும் நான் அம்மொழியைத்தான் கூறினேன். ஆனால் அவரவர் தலைவிதிபொன்று குறுக்கே நிற்கின்றதல்லவா! அதன் படிக்குத் தான் யாவும் நடக்கும். என் பிறவிப் பிணி என்று நீங்குமோ! என்னுவி என்று மடியுமோ! என் மனத் துபரம் என்று தீருமோ! என்னால் கஷ்ட மனுபவிக்கின்றவர்களுக்கு என்று நிவர்த்தியுண்டாகுமோ அன்று தான் என்னுடைய மனம் நிம்மதியடையும். டாக்டர்! நான் என் மனத்திலுள்ளதை இன்றே உடைத்துக் கூறுகிறேன். மாபெரும் வினையைச் செய்துவிட்ட இப் பாவிக்கு இவ்வுலகில் என் சாருகாஸனே இஷ்ட தெய்வமாயும், பேசும் தெய்வமாயும், சகல விதத்திலும் அவனே எல்லாம் என்றும் எண்ணி மனப்பால் குடித்து, துள்ளிக் கர்வித்திருந்த என் வாயில் முற்றிலும் மண் விழுந்தது. அவ்வாறு மண் விழப்பட்ட பாதகி எனக்கு அந்த நிமிடமே உயிர் ஒன்று நீங்கலாக யாவும் மடிந்து விட்டன. ஏதோ பூர்வ ஜென்ம புண்ணிய வசத்தினால் எனக்கு சகல விதத்திலும் துன்பம் ஏற்பட்டிருப்பினும் இந்த கணவனாவது கிடைத்தது ஒரு சிறு திருப்தி யுண்டாகின்றது. அவருக்கு ஆயுள் பஞ்சமின்றி எனக்கு மங்கல்ய பலத்தையாவது அளித்திருந்து அந்த ஒரு நூல் சரட்டுடன் என்னை எம்பெருமான் திருவடியில் சேர்த்துக்கொண்டால் அதுவே எனக்குப் பெருத்த மகிழ்ச்சியாகும். இம்மையில் இதைவிட வேறு யாதும் எனக்குக் கிடைக்காது. டாக்டர்! நான் எனது மனத்திலுள்ளவற்றை ஒன்று விடாது

உடைத்துக் கூறிவிட்டேன். என் மனத்தின் மர்மத்தை இது காறும் அறியாமலிருந்தாலும் இப்போது அறிந்துகொண்டு விட்டீர். ஆகை யால் எனக்கு பின்னும் மனம் புண்ணுகித் தவிக்கும்படியாகச் செய்யாது என்னையும் உமது ப்ரேமாமணியைப் போல நினைத்து ஆதரிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இதைத் தவிர வேறு பேசுவதற்கு எனக்கு யாதுமில்லை நான் இனி அதிக நேரம் நிற்கலாகாது; சென்று வருகிறேன். உம்முடைய மனத்திலுள்ள எண்ணம் நிறைவேறப் பெறுதது. ஆகையால் அதை மறந்துவிடுவது மிகவும் ச்ரேஷ்டமானது. விஷத்தைத் தலைக் கேற விடுவது ஆபத்தேயாகும்.

சோம:—ஜெயமணீ! நீ சொல்லவேண்டிய வார்த்தையை, நியாயத்தை நீ கூறியது உனக்கு தர்மமே யாகும். உனது நலனைக் கோருவது உனக்கு முக்யந்தான். ஆயின் அவரவர்களின் மனத் துயரத்தை அவரவர்களே தான் அனுபவிக்கவேண்டும். சாருகாஸ னும் நீயும் பரஸ்பரமான அன்போடு காதலித்தீர்கள். அது பயன் படாது ஒழிந்தது என்ற விஷயம் உனது விவாக காலத்திலேயே தெரிந்துவிட்டது. அவ்வாறு தெரிந்திருப்பினும் உங்கள் மனத்தி லுதித்த காதலை மாற்றும் சக்தியோ, மறக்கும் திறமையோ, உங்க ளிடம் இன்னும் பிறக்கவில்லையே! அவ்வரிய அனுபவத்தை நன் ருகத் தெரிந்திருந்தும் நீ என்னைக் கூறுவது பொருந்துமா! என் மனத்திலுள்ள எண்ணம் என் பிணத்துடன் நிவர்த்தியாகும் என்பது மட்டும் உறுதிதான். ஜெயமணி! நான் ஒரு கமலாப் பழம் புசித்தாலும் அதில் ஒரு சுளை உனக்கென்று எடுத்து வைத்து விட்டுப் பிறகே நான் சாப்பிடுகிறேன். என் மனத்தின் அனுப வங்கள் எனக்குத் தான் தெரியும். ஆனால் அது விஷயமாக உனக்குச் சற்றும் பயம் வேண்டாம் என்பதை மற்றும் நான் உறுதியாகக் கூறுவேன். விஷத்தைத் தலைக் கேறவிடக் கூடாதென்று அறிவேன். என்னுடைய விஷம் தலைக்கேறி என்னை மீறி விடுமாயின் என்னால் உனக்குத் தீங்கின்றி என்னுயிர் நீங்கி என்னைப் பிணமாகக் காணலாகுமே யன்றி மற்ற விஷயத்தில் யாருக்கும் ஒருவிதமான பயமும் வேண்டாம் என்பதை திட்ட

மாக நம்பு; நான் சென்று வருகிறேன். அப்போதைக்கப்போது நான் இங்கு வருவதற்கு மட்டும் உத்தரவு கிடைத்தால் போதும். நான் சென்றுவருகிறேன். கவலேப் படாதே. எனது தப்பிதத்தை மன்னித்துவிடு. உத்தரவுதானு?'' என்று மெல்ல வருத்தத்துடன் கேட்டான். ஜெயமணியும் தலையையசைத்தாள். உடனே சோம நாதன் போய்விட்டான்.

தனியாக விடப்பட்ட ஜெயமணிக்கு மனம் ஒருவித நிலைமையி வில்லாமல் குழம்பிக் கலவரத்திற்குள்ளாகிவிட்டது. ஏதேதோ யோசனை செய்துகொண்டே இருந்து பின்னர் தன் வேலையைக் கவனிக்கச் சென்றாள்.

* * * * *

"சாருகாஸனின் பெற்றோர் தனது குமாரனையும் காணுது பெண் வீட்டாரையும் காணுது வருத்தமுற்றுத் தபிக்கையில் வீட்டுக்காரர்கள் சொல்லிய வார்த்தை யாவும் அவர்கள் மனத்தில் ஈட்டி கொண்டு குத்தின.'' ஐயோ! என்ன காரியம் நடந்துவிட்டதோ! என்கிற பெருந் திகில்கொண்டு கலங்கிய வண்ணம் வீடு வந்து சேர்ந்தார்கள். "பெண் வீட்டார் எந்த ஊருக்குப் போய்விட்ட தாகத் தெரிவது? அவர்கள் யாது காரணம் பற்றிச் சென்று விட்டார்கள்?'' என்கிற விவரத்தை அறியக் கூடாது தத்தளிக் கின்றார்கள் "ரிஜிஸ்தர் கடிதம் வரும் என்று கூறினுர்களே! எந்த விஷயத்தைப்பற்றி நமக்கு ரிஜிஸ்தர் செய்யவேண்டும்?'' என்ற பல வித யோசனைகளினுல் உலுப்பப்பட்டு தவித்தார்கள். அன்றைய தினமே சாருகாஸன் ரயிலடியில் எழுதி விடுத்த கடிதம் வந்து சேர்ந்தது. அதைக் கண்டதும் வெகு பரபரப்புடன் அக் கடிதத்தை உடைத்துப் படிக்கலானுர்கள்.

எனது பெற்றோர் என்று கூறுவதற்கும் என் மனம் துணியவில்லே; வெறுப்புற்று மனம் வேகுகின்றது. பிறந்த காலந் தொட்டு இறக்குங் காலம் வரையில் சதா துயரக் கடலில் துளேந்து மகிழும்படியாகச் செய்துவிட்ட ஒரு பேரு பகாரம் போதா தென்று ஒரு ஜெயமணிக்குத் துணையாக

மற்று;மொரு மணியைத் ;தீர்மானிக்க, உங்களுக்குக் கடவுள் கொடுத்த மதி எங்கு சென்றதோ தெரியவில்லை! அநியாய மாக ஓர் உயிரை—ஈருயிரை, மூவுயிரை—வதை செய்தது உங்களுக்கு த்ருப்தியாகவில்லையா! அன்னிய மாதரசியின் ஆயுளையும் அபகரிக்க ஏன் வழி தேடவேண்டும்? அப் பெண் பாவை தனக்கிஷ்டமான கணவனை மணந்து வாழா வண்ணம் கொலை செய்ய ஏன் நீங்கள் முன்வரவேண்டும்? என்னுடைய சந்தோஷத்தையும், சந்தான உத்பத்தியையும், குடும்ப விருத்தியையும் நீங்கள் கோருபவர்களாக விருப்பின் ஆதி காலத்திலேயே உங்கள் த்வேஷத்தை வேரறுத்துவிட்டு, என் கண்மணி போன்ற ஜெயமணியை எனக்கு மணம் முடிவித் திருக்கமாட்டீர்களா! அதிகமாகப் பேசினுல் 'உனக்கும் அவளுக் கும் ப்ராப்த மில்லை; விவாகம் தடைபட்டது' என்று வேதாந்தம் பேசலாம். கடவுளின் சித்தம் இது என்று கூறலாம். அதே போல நான் இவ்விதம் துன்பத்தில் அளைந்து ஒண்டிக் கட்டை யாகி—பரதேசியாகி—உயிர் நீத்தல் வேண்டுமென்று என் தலை யிலும் பிரமன் எழுதிவிட்டான் என்றதை இனியேனும் நம்புங்கள். விவாகத் தடைக்கு மட்டும் கடவுளின் செயல் என்ற நம்பிக்கையுள்ளவர்களுக்கு மற்ற யாவற்றிலும் அந்த நம் பிக்கையையே கொண்டிருப்பது தான் ஒழுங்கு. நீங்கள் செய்த—செய்யும்—அக்ரமங்கள் போதா வென்று மகா சாது வாகிய ஜெயமணியிடம் சென்று வீணுக அவளை மிரட்டி, உருட்டி, பயமுறச்செய்து தகாத வார்த்தைகளை—வசைகளைக் கூறி அவளிடம் கடிதம் பெற்றுக்கொண்டு வந்துவிட்ட தனுலேயே எனது விஷயத்தில் நீங்கள் செய்துவிட்ட கொடு மையை மறக்கவும் அந்த கடிதத்தைக் கண்டதும் விவாகம் செய்துகொண்டு மகிழவும் மனம் துணிந்துவிடக் கூடியவன் இந்த சாருகாஸனு! என்னுடைய சந்தோஷத்தையும் வாழ் நாளின் இன்பத்தையும் அடியோடு மடியச் செய்துவிட்டபிறகு எனக்கு விவாகமா! ஐயோ! என் கண்மணி, இன்பமணி ஜெயமணியைப் பறிகொடுத்துவிட்ட பின்னரா மற்ற மங்கையை மணப்பேன்? வயதில் பெரியவர்களாகிய உங்க

ளுக்கு ஏன் இந்த நினைவு மறந்துவிட்டது? இனி இத்தகைய விஷயத்தில் தலையிட வேண்டாம். நான் அந்தப் பெண் வீட்டாருக்கு உங்கள் வஞ்சகத் தன்மையை நன்கு எடுத்துக் கூறி விட்டேன். இனி அவர்களிடமிருந்து வரும் பாணங்கள் உங்கள்மீது எவ்வாறு பாயுமோ அதை அறிந்துகொள்ளவும். இனிமேல் உங்களுடைய பொய் தந்திக்கு ஒருபோதும் சாருகாஸன் அசைவான் என்று எண்ணவேண்டாம். ஜெயமணியினுடைய ஆத்மசுத்திக்குக் கடவுள் மெச்சி அவளை ஆதரித்தால் போதும். உங்கள் நாற்ற வாயினால் நீங்கள் எது பேசியபோதிலும் உத்க்ருஷ்டமான பண்டம் ஒருபோதும் பழுதாகிவிடாது. அவளுடைய விஷயத்தில் நீங்கள் இது பரியந்தம் செய்துள்ள அநேக நன்மைகள் அவளுடைய ஆயுள் நீங்கும் வரையில் மறக்கக்கூடியவையல்ல. இனிமேல் உங்கள் உதவி வேண்டாம். அந்த மாமணியின் விஷயத்தில் நீங்கள் ப்ரவேசிக்கவேண்டாம். பிரவேசிக்கமாட்டீர்களென்று நம்புகிறேன். உங்களுக்கு நான் பிறக்கவில்லை என்று எண்ணித் தலை முழுகிவிடுங்கள். இனிமேல் என் விஷயத்தில் நீங்கள் எக்காரியமும் செய்யாமல் இருப்பதே எனக்குப் பெருத்த நன்மையைச் செய்ததாகும். இதை உணருங்கள்.

இங்ஙனம்
கொடும்பாவி
சாருகாஸன்."

தமிழ்நாடு ... காப்பக நூலகம்
210022

என்கிற கடிதத்தைப் பாகீரதி படிக்கக்கேட்ட பெற்றோர்கள் தம்மையறியாது கண்ணீர்விடலானார்கள். "ஐயோ! காலச்சக்கரம் இவ்விதமாகவா சுழன்று மாறிவிட்டது!" என்று மூவரும் பெருந்துயரில் மூழ்கினார்கள். இனி தாம் என்ன செய்தால் மகனைச் சமாதானம் செய்விக்கலாம் என்கிற பெருத்த யோசனையுண்டாய்விட்டது. அதே கவலையோடு செல்ல, மறுதினம் ஓர் ரிஜிஸ்தர் கடிதம் வந்துவிட்டது. அதைக் கண்டவுடன் அவர்கள் குடல் நடுக்கம் எடுத்துக் கொண்டது. நிரம்பவும் பயந்தவாறு அந்த கடிதத்தைப் படிக்கலானார்கள்.

"ஐயா! உங்களுடைய மோசத்தை நான் அறிந்து கொண்டபடியால் அதிகமாக எதுவும் எழுத என் மனம் இசையவில்லை. நீங்கள் வயதுவந்த உங்கள் குமாரரை ஏற்கெனவே வாழ்நாளின் இன்பத்தி லீடுபடச்செய்யாது பாழ்ப்படுத்திய மோசத்தை உள்ளடக்கிவிட்டு, அந்த குமாரரின் உத்தரவையே பெறுமல் எங்கள் மகளை மணப்பதற்காகச் சகல ஏற்பாடுகளையும் செய்து எங்களையும் ஊர்விட்டு ஊர்வரச்செய்து கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும், அவமானத்திற்கும் உள்ளாக்கிவிட்டீர்கள். உங்கள் குமாரனின் அபிப்ராயத்தைக் கேட்டதாயும், அவர் எங்கள் பெண்ணின் படத்தைக் கண்டு சம்மதித்ததாயும் எங்களிடம் கபடமாயும், பொய்யாகவும் உரைத்து மோசம் செய்துவிட்டீர்கள். உங்கள் குமாரர் யோக்கியராகையால் அவர் தமது வரலாற்றையும் உங்களுடைய மோசத்தையும் எடுத்துக்கூறி எங்களைக் காப்பாற்றினுர். மற்றொருவராயின் உங்கள் உபத்திரவத்திற்காக மணத்தை முடித்துப் பின் மணமகளைத் திரும்பிப் பாராமல் ஆயுள்பரியந்தம் அவதிக்குள்ளாக்கி இருப்பார். அவருடைய பெருந் தன்மையில் அவர் தனக்குள்ள துன்பத்துடன் மற்றொரு நங்கையையும் நாசம் செய்யவேண்டாம் என்கிற நல்லபிப்பிராயத்தை எங்களிடமே கூறிவிட்டார். உங்களுடைய மோசச் செய்கையினுல் எங்களுக்கு 5000 ரூபாய் இப்போது நஷ்டமாகிவிட்டதை நாங்கள் சட்டப்படிக்கு உங்களிடம் வசூலிக்கத் தீர்மானித்திருக்கிறேம். வயதில் பெரியவர்களாகிய நீங்கள் இத்தகைய மோசம் செய்வது சிறிதும் நன்றுக இல்லை. இதற் கடுத்த கடிதம் வக்கீல் நோட்டீஸாக எதிர் பார்க்கலாம். உங்களை வெறுமனே விடுவதாக எங்களுக்கு யோசனை இல்லை.

இங்ஙனம்

தண்டாயுதம்."

என்ற கடிதத்தைப் படித்ததும் முன்னிலும் பதின் மடங்கு அதிகரித்த பயமும், திகிலும், மனக் குழப்பமும் உண்டாகிவிட்டன.

இதற்குத் தாம் இன்னது செய்வதென்பதை யறியாது துடித்த வாறு மூவரும் சேர்ந்து யோசிக்கலானார்கள். அவ்வாறு யோசித் ததில், சாருகாஸனின் தந்தையே மீண்டும் தண்டாயுதத்தின் வீட்டிற்கு நேரில் சென்று தமது தப்பிதத்தை ஒத்துக்கொண்டு நஷ்ட ஈடு கட்டிவிட்டு வருவதாக தீர்மானித்துக்கொண்டு, உடனே அவர் தண்டாயுதத்தின் மனை நோக்கிச் செல்லலானார். அவர் மனக் குழப்பம் அதிகரித்துவிட்டது. 'அங்கு சென்றால் என்ன நடக்குமோ! என்னைக் கண்டு யாது பேசு வார்களோ! எவ்விதமான அவமரியாதை நடக்குமோ!' என்கிற பெருத்த யோசனையினால் மனம் தவித்தவாறு சென்றார். தன் மகன் செய்துவிட்ட வஞ்சம் ஒரு புறம் பாதித்து அவன் மீது ஆத்திரம் பொங்குகின்றது. "பாவி மகன் பொருட்டாக இத்தகைய எதிர் பாராத சங்கடங்கள் நேர்ந்துவிட்டனவே! என்ன செய்வது?" என்ற பெருத்த விசாரத்துடன் தண்டாயுதத்தின் வீட்டை யடைந் தார். அவர் முகத்தில் அவமானமும் துக்கமும் தாண்டவமாடு கின்றன. அத்தகைய தோற்றத்துடன் சென்ற மனிதரைக் கண்ட தண்டாயுதம் வியப்புற்றார். திடீரென்று இவர் வருவார் என்று நினைக்கவில்லையாகையால் நிரம்பவும் ஆச்சரியத்துடன் அவரை நோக்கினார். வாருங்கள் என்றும் அழைக்கவில்லை. சற்று வெறுப்புடன் ஒருவிதமாகப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தார்.

சாருகாஸனின் தந்தை அங்கு சென்றவுடன் தண்டாயுத பாணி உட்கார்ந்திருக்கும் மாதிரியிலிருந்து அவருடைய நிலைமையை நன்றாகத் தெரிந்துகொண்டுவிட்டார். அவ்வாறு தெரிந்தவுடன் தானே முன்பு சென்று விசாரிக்கவேண்டும், அவ்வாறு செய்வது தான் நலம் என்ற யோசனையுடன் தண்டாயுதத்தின் எதிரில் சென்று "நண்பரே! தங்களுடைய முன்னிலையில் வருவதற்கும் எனக்கு நிரம்பவும் வெட்கமாக இருக்கின்றது. நாம் ஒன்று நினைத் தால் காரியம் ஒன்றாக ஆய்விட்டது. தங்களைக் கண்டு தங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும்பொருட்டாகவே நான் இங்கு வந்தேன். தாங்கள் நினைப்பதுபோல நான் தங்களை மோசம் செய்ய வேண்டுமென்கிற கருத்துடன் செய்த காரிய மல்ல வென்

யதைப் பன்முறையும் கூறுவேன். நான் ஒருவிதமாக எண்ணிச் செய்த காரியம் எதிர்பாராத வேறு விதமாக நடந்துவிட்டது. இதைப்பற்றித் தாங்கள் எங்களை மன்னிக்கவேண்டும். நீங்கள் தெரிவித்தபடியே இதோ உங்களுக்கு மான நஷ்டத்திற்கான பொருளை செலுத்தத் தயாராக வந்திருக்கிறேன். சென்ற விஷயத்தை எண்ணி நீங்கள் சிந்திக்கலாகாது. அவைகளை மறந்துவிடவேண்டும்." என்று மிகவும் நயமாகவும், வணக்கத்துடனும் கூறினர்.

இதுகேட்ட தண்டாயுதம் நிரம்பவும் கோபத்தோடு பேசத் தொடங்கி, "ஐயா! நீங்கள் பெரிய மனிதரென்றும், கௌரவம் பெற்றவர் என்றும் நான் மதித்து நம்பினேன். நீங்கள் இவ்விதம் கேவலமாக என்னை நடத்திவிட்டது சிறிதும் நன்றாக இல்லை. உங்கள் குமாரனுடைய மன நிலைமை முற்றிலும் நீங்கள் அறிந்ததேயாகும். அந்த மனிதரை சகல அம்சத்திலும் பாழ்ப் படுத்திய கொடுமை உங்கள் வசமே இருக்கின்றது. அத்தகைய விஷயங்களை அறிந்து நீங்கள் அவருடைய அநுமதியைப் பெறாது இத்தகைய பெருத்த காரியத்தை முடித்துவிடத் தீர்மானித்து எமக்கு வீணான கஷ்டம், நஷ்டம், அவமானம் முதலியனவற்றை விளைவித்தல் தான் உமது பெருந்தன்மையான யோக்யதைக்கு அழகாயிற்றோ! உங்கள் குமாரன் மனமாரக் காதலித்த கன்னிகையை மணம் செய்வித்துக் கண்டு களிக்கும் பாக்யத்தை இழந்துவிட்ட நீங்கள் இனி வேறு பெண்ணை மணம் செய்து அவனையும் ஆயுள் பரியந்தம் அலறி மடியும்படியாகச் செய்துவிட்டால் உங்கள் மனம் மகிழ்ந்துவிடுமோ! வயது வந்த பிறகு எந்த பெண்ணுக்கோ, எந்த பிள்ளைக்கோ மணம் முடிப்பதென்றால் அவரவர்களுடைய மன விரோதமாகவோ, இஷ்ட மற்றவரன்களையோ, பணத்திற்கு ஆசைப் பட்டு முடித்துவிடுவதால் சிறிதேனும் சுகமுண்டா! உங்கள் குமாரர் காதலித்தப் பெண்ணை நீங்களறியமாட்டீர்களா? அறிந்தும் அவ் விவாகத்தை நடத்தாமல் அவ் விருவரையும் பாழ்படுத்திவிட்டீர்கள். அந்த வயிற்றெரிச்சல் போதாதென்று என் மகளையும அவர்களுக்குத் துணையாகச் செய்ய துணிபுடன் முன் வந்துவிட்டீரே! உமது மனந்தான் என்ன மனமோ! தாமீன்ற மக்களின்

துக்கங்களைப் பெற்றோர் கவனிக்காவிடின் மற்றோர் கவனிக்க வருவதுண்டா! உங்கள் குமாரரைப் பார்த்தால் எங்கள் மனம் பதைத்து எரிகின்றது. உங்களுக்கு அது சகஜமாய்விட்டதா! காதல் என்பது ஒரு காரணத்தைக்கொண்டு ஜனிப்பதா! அதற்குப் பணமும், பட்டமும், அந்தஸ்தும், ஐச்வர்யமும் தேவையா! தெய்வீகமாக உண்டாகும் காதலுக்கு மனமும், ப்ரியமும் காரணமேயன்றி மேற்படி மற்ற விஷயங்களில் காதல் ஜெனிக்காது. அதன் உயர்வான உண்மையை அறியாமல் நீங்கள் இவ்விதம் செய்துவிட்டது சிறிதும் நன்றாகவில்லை." என்று வாய்க்கு வந்தவாறு வசையாகவும் விசையாகவும் கூறிவிட்டார்.

இம்மொழிகளாகிய பாணத்தினால் தாக்கப்பட்ட அம் மனிதர் தன்மீதுள்ள குற்றங்களைத் தானே ஒப்புக்கொண்டதுபோல தலை குனிந்து மவுனமாக உட்கார்ந்திருந்தார். பிறகு பேசத் தொடங்கி, "ஐயா! தாங்கள் சொல்லிய எல்லாம் மிகவும் உண்மையாகும். ஆயினும் தங்களுடைய புதல்வியை நான் கெடுத்துக் கண்ணீர் சிந்தும் வண்ணம் செய்விக்கவேண்டுமென்கிற எண்ணம் ஒரு சிறிதும் கொண்டவனல்ல. எங்கள் மகனை நல் வார்த்தையில் திருப்பி அவன் மனம் சம்மதிக்கும்படியாகச் செய்து இவ் விவாகத்தை முடிக்கலாமென்று எண்ணினேன். அவ் வெண்ணத்திலும் மண் விழுந்தது. தாங்கள் இனிமேல் அவைகளை அடியோடு மறந்துவிடவேண்டுமாய்க் கோருகின்றேன்" என்று கூறிக்கொண்டே தான் கொண்டுவந்திருந்த ரூபாயை எடுத்து வைத்தார்.

இதைக் கண்டதும் அம் மனிதர் "ஐயா! இனிமேல் இவ்வித காரியங்கள் நடவாதிருக்கும்பொருட்டாக நான் இவ் விஷயங்களைப் பத்திரிகையில் பிரசுரிக்கலாமென்று எண்ணுகிறேன். இந்தவிதமான அநியாயங்கள் இன்னும் நம் கண்காணாத இடத்திலும் செவியில் படாத இடத்திலும் எத்தனை நடக்கின்றனவோ அவைகளை எல்லாம் விசாரித்து இனிமேலாகிலும் இத்தகைய கொடுமைகள் நடவாதிருக்கும்படியாகச் செய்யவேண்டுமென்பது எனது கோரிக்கை. ஆகையால் நான் இந்த விஷயங்களை சவிஸ்தார

மாக விளம்பரம் செய்யத் தயாராக இருக்கின்றேன்" என்று சற்று மூடுக்காகக் கூறினர்.

இதைக்கேட்டதும் அவர் மனம் திக்கென்றது. அவர் தண்டாயுதத்தின் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு, "ஐயா! ஏதோ அறியாமையினல் நடந்துவிட்ட இவ்விஷயங்களைத் தாங்கள் பகிரங்கப் படுத்தி எமது மனத்தை நோகச் செய்வது கூடாது. நான் மிகவும் வேண்டிக்கொள்கிறேன். இனிமேல் நீங்கள் இந்த விஷயங்கள் நடந்ததாகவே மனத்தில் எண்ணுமல் மறந்துவிட வேண்டும். தயவு செய்து இவைகளை வெளியிட வேண்டாம்." என்று மிகவும் கேட்டுக்கொண்டதன் பேரில் தண்டாயுதம் ஒருவித மான சமாதானத்திற்கு வந்தார். பிறகு அந்தப் பணத்தை அவரிடம் சேர்த்துவிட்டு உத்தரவு பெற்றுக்கொண்டு, சாருகாசனின் பிதா தம்முடைய ஊரை அடைந்தார். "ஐயோ! இதென்ன காலச் சக்கரம் இவ்விதம் ஆட்டுகின்றதே!" என்று வருந்தியவாறு தாம் சென்று வந்த விஷயங்களை எல்லாம் வீட்டில் பேசிக்கொண்டிருந்தார்.

* * * * *

இவ்வூரை விட்டுச் சென்ற சாருகாஸன் தன்னுடைய தலை விதியை எண்ணி வருந்தியவாறு ஜெயமணிக்கும் சோமநாதனுக்கும் கடிதங்கள் அனுப்பிய பிறகு ஓர் பயித்தியக்காரன் போலாகி விட்டான். ஜெயமணியின் கடிதத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந் தான். அவனுடைய சகல அபீஷ்டங்களும் நிறைவேருது பாழாகி விட்டன போலல்லாமல், ஜெயமணியின் கடிதம் குறித்த நாளில் சாருகாஸனின் அன்பு நிறைந்த கரகமலங்களில் தாவி நின்றது. உடனே அதை உடைத்துப் படிக்கலானுன்.

"அன்பு நிறைந்த சாருகாஸா! என்னுவி நீங்கிடாத விஷயத்தை உனக்கு வரைவதே சகல சுகமும் என நீ நினைத்திருப்பதே போல பாவி வரைகின்றேன். உன் கடிதம் கண்டேன். நம்முடைய ஊழ்வினையே நம்மைப் பாழ்படுத்தி மீளாத் துயரத்திற்கு ஆளாக்கி விட்டதேயன்றி பின்னெருவரைக் கூறுவதில் பயனில்லை. அவர்கள் மனத்தில், உனக்கு நன்மை

செய்து, அதனால் நீயும் அவர்களும் அக மகிழ்ந்து கொள்ள வேண்டுமென்கிற நல்லெண்ணங் கொண்டு செய்த காரியமேயன்றி வேறில்லை. மகா பாபியாகிய என் பொருட்டாக நீயும் இவ்விதமான துன்பத்துடன் உயிரை விடத்தீர்மானித்ததை எண்ணினால் என்னையறியாத சித்திரவதை செய்கிறது. எந்த வதை செய்தாலும் உயிர் மட்டும் ஒரு சிறிதும் நீங்குவதைக் காணவில்லை. எனக்கு அவ்வாசை அதிகரிப்பதால், முன்னர் உன்னை மணக்கக் கரை காணாத ஆவல் கொண்டு மோசமாய் விட்டதே போல இவ்வாசையும் நாசமாகி என்னைப்பிறர் ஏசிப் பேசி நகைக்கும்படியாக தீர்க்காயுஷாகவே வளருகின்றது.

என் பிரிய சாருகாஸா! நான் யார் மீதும் கோபிக்கவில்லை. என் பாழ் பிறவியில் இனி கோபமும், தாபமும் கூட வேண்டுமோ! நான் ஒருவரையும் பழிக்கவோ, பகைக்கவோ முன் வரவில்லை. என் பூர்வ ஜென்மத்துப் பாபங்கள் என்னையும், என்னை இச்சித்த உன்னையும் மோசம் செய்து விட்டதை நான் என் அங்கம் அனலாகிய பின்னரும் மறக்கத் திறனற்றிருக்கையில் இன்னும் என் மனமறிந்து நான் பிறரைத் திட்டியோ, கோபித்தோ வேறு சுமையை ஏற்கவேண்டுமோ! வேண்டாம்! வேண்டாம்! இம்மட்டும் என் பிறவி யொழிந்து என் துயர் நீங்கி என் மனம் களித்து இன்புற்றால் போதாதா!

என்னப்பனே! சாருகாஸா! எனக்கு யார் மீதும் கோபமில்லை. நீ கவலையே கொள்ளவேண்டாம். இதை எண்ணி மனம் வருந்தவேண்டாம். நான் உனக்கு ஒருவிதத்தில் துன்பத்துணையாக விருந்தாலல்லவோ கூற விஷயமுண்டாகும். பல விதத்திலும் உனது துன்பத்திற்குப் பாவி நானே துணையாகி விட்டேன். என் பொருட்டாக நீ பட்ட கஷ்டங்களெல்லாம் போதும். வீணான கவலைகொண்டு வருந்தாதே! நீ இவ்விவாகத்தை இவ்விதம் நிராகரித்துவிட்டது எனக்கு மிகவும் வருத்தமாகவிருக்கிறது. நீ என் தட்டவேண்டும்? விவாகம் செய்துகொண்டு உன் குடும்பத்தை விருத்தியடையச் செய்திருக்கலாகாதா! உம், இவ்வார்த்தை நான் பலதரம்

எடுத்தோதியதேயாதலால் மீண்டும் கூறுவதில் பயன் யாது என்றுவிடுகிறேன். என் பர்த்தாவுக்கு சில தினங்களாக உடம்பு சரியில்லே. சோமநாதன் தான் மருந்து கொடுக்கின்றார். இப்போது சற்று குணமாகவிருக்கின்ற சந்தோஷச் செய்தியை யுரைக்கின்றேன். "மாலின் திருவருளால் மங்கையர்கள் மகிழ்ந்திடுதல் தாலிச் சரட்டினுல்தான்" என்பது போல ஒரு நூல் சரட்டிற்கும் தாலியுருவிற்குமே தற்போது நான் தரணியில் வாழ்வது. ஆகையால் அவ்விஷயத்திலாவது கடவுள் எனக்குக் குறை செய்துவிடாமல் காப்பாற்றிவிட்டால் அதுவே போதுமானது. மற்றபடி நான் வேறு எந்த சந்தோஷத்தை எழுதி உன்னே மகிழ வைக்கப்போகின்றேன். இம்மையில் வேறெதுவும் இல்லே. தினந்தோறும் கனவு காண்பதும், கண்ணீர் விடுவதும், கலங்கித் தவிப்பதும், களிப்பற்றிருப்பதும் தான் எனது பிறவிப்பயனுகிவிட்டது. இதைத் திருப்பித் திருப்பி எத்தனை தரம் சொல்லியபோதிலும் அதே வார்த்தை தான்; விஷயந்தான், துக்கந்தான்.

என் சாருகாஸா! நீ எழுதியது போல நான் எண்ணுப்வதற்கு யார் என்ன குற்றம் செய்தார்கள்? என் தலைவிதியே என்னை வஞ்சித்து ஏமாற்றியபோது பிறர்மீது குற்றமாவது, கோபமாவது கொள்வது நீதியாகுமா! ஒருநாளும் ஒருவர் மீதும் குற்றமில்லே. நான் மன்னிக்கவும் யோக்யதை உடையவளன்று. ஆகையால் நீ கவலேப்படாதே. இவ்விஷயத்தை இம்மட்டுடன் விட்டுவிடு. நடந்ததாகவும் மனத்தில் நினைக்க வேண்டாம். எல்லாம் காலச் சக்கரத்தின்—வேளையின்—கொடுமையால் என்னென்ன நடக்கவேண்டுமோ அவைகள் நடக்கின்றன, நடந்துவிட்டன; இனியும் நடக்கப்போகின்றன. ஆகையால் நமது விதியை விலக்கிவிட்டு மதி கெட்டு உரைப்பதுண்டா! அதில்லே. வீணுக பிறரை வைவதில் பயன் யாது? அவ்விதம் எதுவு மில்லே. எந்தெந்த காலத்தில் எது நடக்கின்றதோ அது நடந்தே தான் தீரும். இனி எப்போது உன்னேப் பார்க்கும்படியான பாக்யம் கிடைக்குமோ தெரியவில்லே.

சாருகாலா! பத்மலோசனு எப்படி இருக்கிறுள். உடம்பு குணமாகிவிட்டதா! அந்த விஷயத்தைப் பற்றி எழுது. மற்ற விதத்தில் நான் உன்னிடம் என்ன விஷயங்களை—க்ஷேமங்களை—விசாரிக்க பாக்யம் செய்தேன். அதுதான் பூஜ்யமாகிவிட்டது. உம். எல்லாம் விதி செய்த கொடுமை. கூடப் பணமும் செய்த பாழான பரிபவம் தான். எதைக் கூறி என்ன பயன்? இதோடு முடிக்கிறேன். கவலைப் படாதே.

இங்ஙனம்
அபஜேயமணி

இந்தக் கடிதத்தைப் படித்த சாருகாலனுக்குக் கூற வியலாத இன்பமும் துன்பமும் ஒன்ருகப் பொங்கிவிட்டன. ஆகா! என் கண்மணி! என்ன பொறுமை! என்ன சாந்தம்! என்ன நற்குணம். என்ன வினயம்! உம் எதைத்தான் எண்ணிப் பேசுவது? இவ்வுலகத்திற்கே தேடற்கரிதான, கிட்டாத மாமணியாக உதித்துவிட்டாய். காட்டில் காய்ந்த நிலவைப் போலும், மனித சஞ்சாரமற்ற வனத்தில் புஷ்பித்த மலர்களைப் போலவும் உன் பிறவியாய் விட்டதே! ஐயோ! என் ஜெயமணீ! உன்னுடைய அழகிய நாமம் தான் என்ன ருசி! என்ன இனிப்பு! எத்தகைய களிப்பு! உம். குருடன் அற்புதமான சித்திரத்தைக் கண்டு என்ன நிலைமையை அடையக்கூடும்? அதேபோல ஆநந்தமான விஷயத்தில் நான் குருடனுக்கு ஒப்பாகவே ஆய்விட்டேன்; பித்தன் போலும் ஆய்விட்டேன்.'' என்று தனக்குள் அலகிலாத எண்ணங்களினல் அகம் கரைந்துருகிக் கண்ணீர் வழிந்தோட, தேகம் சோர்ந்து வாட, மனம் தத்தளித்தாட சிந்தாக்ராந்தனுய் உட்கார்ந்துவிட்டான்.

17-வது அதிகாரம்.

நித்தியானந்தம்—சத்திய பரிபாலனம்

சந்திரகாஸனும் ப்ரேமாபாயும் தேனும் பாலும் போல மனமொற்ற இன்பத்துடன் இல்லறம் நடத்தத் தொடங்கினார்கள். அவர்களுடைய அன்யோன்ய பாவத்தைக் கண்ட யாரும் ஆச்சரிய முறும் வண்ணமாக அவர்கள் விளங்குகின்றார்கள். அவர்களுடைய காதலெல்லாம் உருண்டு, திரண்டு ஒரு உருவமாக அமைந்தது போல ப்ரேமாபாய் கர்ப்பவதியானாள். அவள் கர்ப்பவதியானதும் முதலில் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியை அடைந்தவன் நமது சந்திரகாஸனே யாவன். ஏனெனில் தன்னுடைய ;உயிர்த் தோழனாகிய சாருகாஸனுக்குத் தனது குழந்தையைக் கொடுப்பதாக வாக்களித்திருந்தபடி அவ்வாக்குறுதியை நிறைவேற்றும் சமயம் எப்போது வாய்க்கும் என்று எதிர்பார்த்திருந்தானாகையால் தன் காதலி கர்ப்பவதியானதும் தனதுதோழனுக்களித்த வாக்கை நிறைவேற்றும் பாக்யம் தனக்குக் கிடைத்துவிட்டதென்கிற பேரானந்தத்துடன் இருந்தான். இவ்வானந்தச் செய்தியை தன் நண்பன் சாருகாஸனுக்குத் தெரிவிக்க எண்ணி ஒரு கடிதம் பின் வருமாறு எழுதினான்.

“என்னுயிரினும் இனிய நண்பன் சாருகாஸனுக்கு உனது ஆப்தமித்திரன் சந்திரகாஸன் எழுதியது. உன் கடிதம் கண்டேன். உனது நிலைமையை எண்ணி நான் வருந்தாத நேரமில்லை. என்னுடைய இதயத்தில் உனது பிம்பம் வீற்றிருந்து எனக்குக் காட்சி கொடுத்துக்கொண்டே இருக்கின்றது. உன்னுடைய ப்ரிய ஜெயமணியை தினந்தோறும் என் காதலி சந்தித்துப் பேசி இன்புறுகின்றாள். ஜெயமணியைப் பற்றி எவ்விதம் தான் புகழ்ந்து கூறுவதென்பதையறியக் கூட

வில்லை. இவ் வுலகத்தில் அந்த மாதர்க்கரசி யாகிய ஜெயமணி யைப் போன்ற வனிதா ரத்தினத்தை இது பரியந்தம் யாரும் கண்டிருக்க மாட்டார்கள். இனியும் காணப்போவதில்லை. அவளுடைய அத்புத குணத்தழகைக் கண்ட யாவரும் வியப் புற்றுத் தடை கட்டிய நாகம் போல நின்றுவிடுகிறார்கள். அவ ளுடைய மனத்தினுள் அடங்கியுள்ள துயரங்களையோ கூறச் சாத்யமின்று. அவைகளை ஒருபோதேனும் வெளியிடுவ தண்டா! தனது மனது இன்னவிதமான நிலைமையிலிருக் கின்றது; தபிக்கின்றது; தத்தளிக்கின்றது என்கிற விஷ யத்தை, அவளுடைய பிறவிக் கதையை (Life history) அறிந்த நமக்குத் தான் தெரியுமே; இதரர் யாரும் அறியக்கூடாது. தேகம் இளைத்திருக்கும் கண்ராவியைக் கூறவேண்டாம். அவள் பதிசிச்ருஷை செய்வதும், பக்தியாகப் பூஜை செய்வதும் பிரதி வெள்ளிக் கிழமையிலும் ஸ்வாமி படங்களுக்கு புஷ்பாலங்காரம் செய்து திருவிளக் கேற்றி பத்து பெண் பிள்ளைகளை அழைத்து பக்திரஸமான கீர்த்தனங்களைப் பாடி பஜனை செய்து சுமங்கலிகளுக்கு வெற்றிலை பாக்குக் கொடுத்து தனக்கு நற்கதியைத் தேடிக்கொள்ளும் அழகை வர்ணிக்கச் சாத்தியமன்று. உன்னுடைய தோழனும் என்னுடைய மைத்துனனு மாகிய சோமநாதன் ஜெயமணியின் தேக நிலை மையையும், அவள் பர்த்தாவின் தேக சுகத்தையும் அடிக்கடி கவனித்துக்கொண்டே இருக்கிறார். சோமநாதன் தனது சோத ரியாகிய ப்ரேமா பாயின் மீது எத்தகைய ப்ரீதியுடனிருக் கின்றாரோ அதைவிட ஆயிரம் பங்கு அதிகமாக ஜெயமணி யின் மீது உயிரையே வைத்திருக்கிறார். சதா காலமும் ஜெய மணியின் கவலையும், உன் கவலையுமே அவரைக் கப்பிக்கொண் டிருக்கின்றன. ப்ரேமாபாயும் ஜெயமணியும் இப்போது நிரம்ப வும் சிநேகிதிகளாய் விட்டார்கள். தினம் ஒரு முறையேனும் சோமநாதன் தனது சோதரியை ஜெயமணியின் வீட்டிற்கு அனுப்பி அவளுடைய க்ஷேமத்தை விசாரித்தவாறிருக்கின்றார்.

நண்பா! ஜெயமணியை இக் கலியுகத்தில் ஓர் தனித்த அவதாரப் பிறவி என்று தான் நான் கூறுவேன். அவளுடைய பெற்றோராலும் உன்னுடைய பெற்றோராலும் இருவரின் பிறவிப் பயனே பாழ்பட்டுவிட்டது. அவளுடைய யௌவனத் திற்கும் அவளுடைய அதிரூபலாவண்ய சிங்கார எழிலுக்கும் அவள்மீது கண் வலை—காம வலை, தீயக்கருத்து வலை—விசாத மனிதர்களில்லை, தினந்தோறும் அவள் வீட்டு வாயிலில் சுற்றி யலையும் சோதாக்களும், மொட்டைக் கடிதங்கள் வரை யும் போக்கிரிகளும் கணக்கிட இயலாது. இந்த விவரத்தை

என் காதலியிடம் தெரிவித்ததை நான் அறிந்து மிகவும் மனம் பதறிப் போய் நான் ஜெயமணி வீட்டிற்குச் சென்று விஷயங்களை விசாரித்து அவளைப் பயப்படவேண்டா மென்று தேறுதல் கூறிப் பின் அங்கு சுற்றியலையும் சோதாக்களை அதற்குத் தக்க மனிதர்களைப் பிடித்து விரட்டி படித்து பயமுறுத்தினேன்.

என்னன்பான சாருகாஸா! ஓர் பெருத்த மலையை அசைத்தாலும் அசைத்துவிடலாம். உன்னருமை ஜெயமணியின் மனமாகிய அற்புத மலையை அசைப்பதற்கு இவ்வுலகில் யாராலும் ஆகாது என்பதை நினைக்க என்மனத்திலுண்டாகும் ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. என் மனம் அறிந்தவரையில் அக்கினியையும், அன்பாற் ஜெயமணியையும் ஒன்றாக வைக்கலாம். அதிற் சிறிதும் சந்தேகமே யில்லை. தன் மனத்தையும் பூர்ண காதலையும் உன்னிடம் தத்தம் செய்தாள். தனது முழு கவனத்தையும், தேக உழைப்பையும் தன் பர்த்தாவிடம் அர்ப்பணம் செய்துவிட்டாள். கங்காதரர் தற்போது சரியான தேக நிலைமையில் இல்லை; சுகவீனராகவே இருக்கிறார். அவருடைய சகலமான பணிவிடைகளையும் இரவு பகலாகக் கண் விழித்துக்கொண்டு தானே செய்கிறாள். இதை நானும் என் மனைவியும் பலதரம் நேராகப் பார்த்திருக்கிறோம். உம்.எது எவ்விதமாயின் என்ன! இரு ஜீவன்கள் பாழாகி விட்ட வயிற்றெரிச்சல் இறந்தாலும் மறக்கக் கூடியதல்ல.

நண்பா! நான் வெகு நாட்களாக எதிர் பார்த்திருந்த ஓர் ஆவல் நிறைவேறும் சமயத்தைக் கடவுள் தற்போதே கூட்டி வைத்திருக்கிறார். அதாவது என் மூலம் நீ அடைய விருந்த ஆனந்தம் உனக்கு நினைவிருக்கலாம். அந்த விதத்திலாவது உனக்கு மகிழ்ச்சி என்னால் கிடைக்குமா என்று ஏங்கிய என் மனம் இன்னும் நான்கு மாதத்திற்குள் பெரும் மகிழ்ச்சியை அடைந்துவிடக்கூடிய சமயம் கிடைத்துவிடும் என்கிற சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். உன்னைக் கண்டு வெகு நாட்களாகி விட்டபடியால் பார்ப்பதற்கு மிகவும் ஆவல் கொண்டிருக்கிறேன். கூடுமானால் ஒருதரம் இங்குவந்து உன் முகத்தைக் காண்பித்துவிட்டுச் செல்லவும். ஜெயமணியும் உன்னைப் பார்க்க ஆசிப்பதாக அவள் வார்த்தையிலிருந்து அறிந்துகொண்டேன். அவளைக் காண்பதற்காகவேனும் வரவும்.

இங்ஙனம்
உன் ஆப்த மித்திரன்
சந்திரகாஸன்."

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
210022

"ஜகன்மோகினி" யில்

வெளிவந்த நாவல்கள்.

மலர் 1. ஸ்ரீமான் வடூவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய

	காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்)	ரூ.	4	0	0
மலர் II.	விலாஸவதி (2-பாகங்கள்)	ரூ.	3	0	0

ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை

கனகசபை	ரூ.	1	8	0
கோகிலம்	ரூ.	0	6	0

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை

மலர் III.	வைதேகி (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் V.	ராதாமணி (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் VI.	நவநீதகிருஷ்ணன் ...	ரூ.	2	0	0
	சண்பக விஜயம்	ரூ.	1	12	0
	கௌரீ முகுந்தன்	ரூ.	1	12	0
	சுகந்தபுஷ்பம்	ரூ.	1	0	0
	கோபால ரத்னம்	ரூ.	0	14	0
	வீரவஸந்தா	ரூ.	0	8	0
	மாதவமணி	ரூ.	0	3	0

"ஜகன்மோகினி" சந்தாதார்களுக்கு குறைந்த விலை.

வைதேகி	ரூ.	2	0	0
பத்மசுந்தரன்	ரூ.	2	0	0
ராதாமணி	ரூ.	2	0	0
நவநீதகிருஷ்ணன்	ரூ.	1	12	0
சண்பகவிஜயம்	ரூ.	1	8	0
கௌரீமுகுந்தன் —	ரூ.	1	8	0

"ஜகன்மோகினி" ஆபீஸ்

26, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

இனாம் தபாற்செலவு இனாம்

இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு "போலீஸ் கிலி போதிராயர்" "ராவ்பகதூர் ரஸகுல்லா சாஹிப்" என்னும் இரண்டு நாவல்கள் அனுப்பப்படும்.

தமிழ் நாவல்கள்

மதனசிங்கர்	ரூ. 1	0	0.	மர்மமுகி	ரூ.	0	12	0
சுந்தரவதனி	ரூ. 0	12	0	வஸந்தசமுத்ரம்	ரூ.	0	12	0
மஞ்சுளா	ரூ. 0	6	0	அமிருதமாலினி	ரூ.	0	4	0

வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி.

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

40 வருஷங்களாக

"ஜகன்மோகினி" யாய் விளங்குவது

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.